

# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம். கொக்குவில். யாழ்ப்பாணம். www.thennadu.org


மேழ விழுகம்ப ஊழி ஆண்டு 2299 மடங்கல் நல்லோரை ஆவணித் திங்கள் 22ம் நாள் (07-09-2025 ஞாயிற்றுக்கிழமை) நிறைமதி வெளியீடு +94 21 222 9722



## செல்வச்சந்நிதியான் பெருந்தேர்த் திருவிழா - ஆவணி 21 ஆம் நாள்

படம் : சற்குணராசா நிதர்சன் (GL Tharshan)

# செல்வச்சந்நிதியான் பெருந்தேர்த் திருவிழா - ஆவணி ௨ஆம் நாள்















# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம், கொக்குவில், யாழ்ப்பாணம்.   www.thennadu.org



**சிவத்திரு. தென்னவன் பார்த்தீபன்** - தலைமை ஆசிரியர்,
BSc Eng (Hons) CPEng (Aust) FIEAust MA (Philosophy)
+6149949 3300, thennavan@thennadu.org




# வேலி பயிரை மேயாமல் பயிருக்கு பாதுகாப்பாக இருக்க வேண்டும்

**எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு - (குறள் - 423)**

தமிழர் பண்பாடு மற்றும் வழிபாட்டு மரபுகளை அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்ல வேண்டியது சமயத் தலைவர்களினது கடமையாகும். தமிழர் பண்பாடு, மொழி, சமயம் என்று மார்தட்டும் தமிழ்த்தேசிய மக்கள், குறிப்பாக இலங்கையில் பௌத்தர்களைப் பார்த்தாவது முன்னேற வேண்டும் என்று வெளிப்படையாக சொல்ல வேண்டியுள்ளது. பௌத்தர்களின் சமய வைராக்கியம், சிறுவர்களுக்கான அறநெறிக் கல்வி, பெரியோரை மதித்தல், மொழிப்பற்று, சமயத் துறவுகள், சமயத் துறவிகளின் எண்ணிக்கை, பாடசாலைகளில் ஏன் ஆட்சியில் கூட அவர்களின் சமயச் சின்னங்கள் மற்றும் போதனைகள் என்று அவர்களின் ஆழமான, திடமான, உறைப்பான பண்பாட்டு விழுமியங்களை அன்றுதொட்டு பின்பற்றியும், பரப்பியும் வருகின்றனர்.

ஆனால் எங்கள் நிலங்களில் நாங்கள் எவ்வாறு எங்கள் பண்பாடு மற்றும் சமயத்தினைத் எடுத்துச் செல்கிறோம் என்று சிந்திக்கும் போது மனம் வேதனை மட்டும் அல்ல ஏக்கமும் கொள்கிறது. உதாரணமாக ஞாயிறு, வெள்ளிகளில், வெளிக்கல்வி நிலையங்களை மூடி அறநெறிப் பாடசாலைகளை நடாத்துங்கள் என்று அரச அதிபர், கௌரவ ஆளுநர் வலியுறுத்தி இருந்தும் இதனை யார் செயற்படுத்தினார்கள். மேலும் அறநெறி செயல்படாமையைக் கண்டித்து எத்தனை பேர், எத்தனை சைவ அமைப்புகள் குரல் கொடுத்தன, முன்னின்று அதனை அமுலாக்க எழுந்து நின்றன. சைவ ஆளுமைகள், அதிகாரம் மிக்கத் தலைமைகள் இதனை முன்னின்று எடுத்துச் செல்ல வேண்டும் என்று விண்ணப்பம் வைக்கிறேன்.

மேலும் சைவ விழுமியங்களைக் கொண்ட நிறுவனங்களில் மற்றும் பாடசாலைகளில், அந்த விழுமியங்களை மேலும் வளர்க்க நிறுவனத் தலைமையும், மற்றும் சைவத் தலைவர்ளும் முன்வரவேண்டும். வளர்க்காவிட்டாலும் சரி இருப்பவற்றை பாதுகாக்க முன்வரவேண்டும். அதுவும் கடினமாயின் அழிவதற்கு துணை நிற்காமலாவது இருக்க வேண்டும் என்ற கருத்தியலை யாவரும் உள்வாங்கிக் கொள்ள வேண்டும். சொல்லில் ஒரு வாழ்க்கை செயலில் இன்னொரு வாழ்க்கையாக இருக்காமல் நாம் வாழ்ந்து காட்ட வேண்டும். இதனையே நாயன்மார்கள் செய்தார்கள் அதனால் அவர்கள் இன்றும் போற்றப்படுகின்றார்கள்.

அபிராமி அந்தாதியில் வரும் பாடலில் **"தாழாத கீர்த்தியை"** வேண்டுபவர்கள் **"மாறாத வார்த்தையும்"** வேண்டுதல் வேண்டும், அதுபோல் **"தடைகள் வாராத கொடையும், தொலையாத நிதியமும்"** வேண்டுபவர்கள் **"கோணாத கோலும்"** வேண்டி வணங்க வேண்டும். உடல் நிலையில்லாதது. மரணம் எப்பவும் வரலாம் ஆனால் நாங்கள் சமுதாயத்திற்கு எவற்றை விட்டுச் செல்கின்றோமோ அவைதான் எங்கள் கண்ணுக்குத் தெரியாத உடலாக என்றும் இந்த உலகில் பரிணமிக்கும்.

ஆகவே நிறுவனத் தலைவர்கள் மற்றும் பாடசாலை முதல்வர்கள் அவரவர் நிறுவனங்கள், பாடசாலைகள் எதற்காக ஆரம்பிக்கப்பட்டவையோ அதனை மேன்மை பெறச் செய்ய வேண்டும். சமயத் தலைவர்கள் சுய விருப்பு வெறுப்புக்களை விட்டு சமயத்தினை வளர்க்க வேண்டும் மற்றும் அதற்காக குரல் கொடுக்க வேண்டும். இப்படி செய்பவர்களை நாங்கள் போற்றி அவர்களின் வளர்ச்சிக்கு மற்றும் செயல்களுக்கு உறுதுணையாக இருக்க வேண்டும். இப்படியான அடுத்த தலைமுறைத் தலைவர்களை நாங்கள் உருவாக்க வேண்டும். இதுவே எங்கள் பண்பாடு வளர்ச்சிக்கு முதற்படியாகும்.

**மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்**



# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம், கொக்குவில், யாழ்ப்பாணம். www.thennadu.org


**சிவத்திரு. தென்னாடு நிலவன்**
அடுத்த தலைமுறை ஆசிரியர் – தென்னாடு,
செந்தமிழ் ஆகம சிவமடம் – கொக்குவில்.
+94 (77) 671 6678 | nilavan@thennadu.org




# தென்னாடு நிறைமதி அறிக்கை

(08-08-2025) – தென்னாடு திங்கள் இதழின் ஐந்தாண்டு நிறைவு – அறுபதாவது சிறப்பிதழ் வெளியீடு கடந்த மேழ விழுகம்ப ஊழி ஆண்டு 2299 கடகம் நல்லோரை ஆடித் திங்கள் 23ம் நாள் நிறைமதி அன்று (08-08-2025 வெள்ளிக்கிழமை) அறுபதாவது தென்னாடு திங்கள் செய்தியிதழ் வெளியீடு நிறைமதி வழிபாட்டுடன் சிறப்பாக இடம்பெற்றிருந்தது.

இந்நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சிவத்திரு. சிவக்கொழுந்து சிறிசற்குணராசா ஐயா அவர்கள், யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் மூத்த விரிவுரையாளர் திருமதி. ஜானகிஅம்பாள் தர்மஜீலன் அவர்கள், யா/பெரியபுலம் மகா வித்தியாலய அதிபர் சிவத்திரு. நடராசா பரமேஸ்வரன் அவர்கள், கனடா சைவநீதி அமைப்பின் தலைவர் சிவத்திரு. குணா துரைசிங்கம் அவர்கள், பொறியியலாளர் சிவத்திரு. அற்புதராசா முகுந்தன் அவர்கள், பொறியியலாளர் சிவத்திரு. மகேஸ்வரன் அவர்கள் மற்றும் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையாரின் மாணவர்கள் சிலர் என அடியார்கள் பலர் கலந்து சிறப்பித்திருந்தனர்.

நிகழ்வில் பேராசிரியர் சிவத்திரு. சிவக்கொழுந்து சிறிசற்குணராசா ஐயா அவர்கள், கனடா சைவநீதி அமைப்பின் தலைவர் சிவத்திரு. குணா துரைசிங்கம் அவர்களுக்கு முதல் இதழினை வழங்கி, தென்னாட்டின் அறுபதாவது திங்கள் இதழை வெளியிட்டு வைத்திருந்தார். தொடர்ந்து ஏனையோர்களுக்கு இதழ்கள் வழங்கி வைக்கப்பட்டது. அன்றைய நாளில், எங்கள் தென்னாடு சைவ மாணவர் சபையின் திருக்கோயில் பணிகளில், கட்டிட நிர்மாணத் திட்டம் வரைதல் பணிகளை சிறப்புற ஆற்றி வரும் பொறியியலாளர் சிவத்திரு. அற்புதராசா முகுந்தன் அவர்களை கௌரவிக்கும் நிகழ்வும் சிறப்பாக இடம்பெற்றிருந்தது.

மேலும் அன்றைய நாளில் இணை நிகழ்வாக, சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு, திருமதி. நளாயினி பகிரதன் அவர்கள் தொகுத்து வெளியிட்ட 'சிவத்தமிழ் நூறு' என்ற நூல் வெளியீடும் இடம்பெற்றிருந்தது.

(08-08-2025) – தென்னாடு சைவ மாணவர் சபையின் திருக்கோயில் அமைத்தல் திருப்பணியின் தொடர்ச்சியாக, தென்னாடு முதல்வர் அவர்களின் பொன்னகவையை முன்னிட்டு, யா/ வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி மற்றும் தி/மூ/ சம்பூர் மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் புதிய திருக்கோயில்களுக்கான அடிக்கல் நாட்டல் வழிபாடுகள் இடம்பெற்றன. (20-08-2025) – ஆவணித் திங்கள் தேய்பிறைக் கழுவாய் வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றன.

(23-08-2025) – யாழ்ப்பாணம் கொக்குவில் மேற்கு பகுதியில், செந்தமிழில் புதுமனைப் புகுவிழா சாந்தி வழிபாடுகள் ஆற்றி வைக்கப்பட்டன. (24-08-2025) – தென்னாடு சைவ மாணவர் சபையின் திருக்கோயில் அமைத்தல் திருப்பணியின் தொடர்ச்சியாக, பூநகரி வைத்தியசாலையில் புதிய திருக்கோயிலிற்கான அடிக்கல் நாட்டல் வழிபாடுகள் இடம்பெற்றன.

(24-08-2025) – மறவன்புலவு வெள்ளக்குளம் வல்லவாம்பிகை உடனுறை அருள்மிகு வீரகத்தி பிள்ளையார் திருக்கோயில் திருக்குட நன்னீராட்டு பெருவிழாவிற்காக தமிழ்நாட்டிலிருந்து வருகை தந்திருந்த, சென்னை சிவலோகத் திருமடம் திருவாசகப்பித்தர் தவத்திரு. வாதவூரடிகள் சுவாமிகள் தென்னாட்டில் வழிபாடு ஆற்றினார். (26-08-2025) – தென்னாடு ஐம்பூதநாதர் திருக்கோயிலில் சென்னை சிவலோகத் திருமடம் திருவாசகப் பித்தர் தவத்திரு. வாதவூரடிகள் சுவாமிகள் திருமுறை விண்ணப்ப வழிபாடுகளும் திருமஞ்சன வழிபாடுகளும் இடம்பெற்றன.

(27-08-2025) – ஆவணி சதுர்த்தி வழிபாடுகள் இடம் பெற்றன. (29-08-2025) – அமரர் வசுந்திராதேவி பரமேஸ்வர நாதன் அவர்களின் ஆண்டுத்திதி வழிபாடுகள் செந்தமிழில் அவரது இல்லத்தில் ஆற்றி வைக்கப்பட்டன. (05-09-2025) – அமரர் சங்கரப்பிள்ளை இராசா அவர்களின் ஆண்டுத்திதி வழிபாடுகள் செந்தமிழில் அவரது இல்லத்தில் ஆற்றி வைக்கப்பட்டன. (05-09-2025) – ஆவணித் திங்கள் வளர்பிறைக் கழுவாய் வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றன.

**திருச்சிற்றம்பலம்**

# சிவனுடன் இரண்டறக் கலந்தார் காசிவாசி எசமான் சுவாமிகள் தொடர வேண்டிய அறக்கட்டளை மடத்தின் தொண்டு மரபு



தஞ்சை மாவட்டம் திருப்பனந்தாளில் விளங்கும் திருக் காசி மடம், சைவ சமயப் பணிகளிலும் தமிழ்ப் பண்பாட்டுப் பரப்பிலும் புகழ்பெற்ற மையமாகும். இம்மடம் தமிழகத்தில் மட்டுமல்லாது வடஇந்திய காசியிலும் பெருமை பெற்றது. சுமார் அறுநூறு ஆண்டுகளுக்கு முன்பு தருமபுர ஆதீனத்தில் தீக்கை பெற்ற சீர்வளர்சீர் குமரகுருபர சுவாமிகள், முகலாய அரசனிடம் வாதாடி காசியில் பூட்டப்பட்டிருந்த அருள்மிகு காசி விசுவநாதர் கோயிலை மீட்டு நித்திய பூசை நடைபெற வழிவகுத்திருந்தார். அவர் அருளால் கங்கை கரையில் நிறுவப்பட்டதே திருக்காசி மடம். அதன் கிளைமடமாகத் திருப் பனந்தாளிலும் மடம் உருவாக்கப்பட்டது.

அந்தப் பாரம்பரியத்தில் பல்லாண்டுகளாக சைவப் பணிகளையும் தமிழ் வளர்ச்சிப் பணிகளையும் செய்து வந்தவரே காசிவாசி எசமான் என்று போற்றப்படும் கயிலைமாமுனிவர் **சீர்வளர்சீர் காசிவாசி முத்துக்குமார தம்பிரான் சுவாமிகள்.**

சுவாமிகள் அவர்கள், **"கோயில்"** என சைவத்தில் போற்றப்படும் தலமான சிதம்பரத்தின், அருகாமையில் உள்ள திருக்கழிப்பாலை திருத்தலத்தை ஒட்டி அமைந்த காரைமேடு என்னும் சிற்றூரில் மாணிக்கம்பிள்ளை, குஞ்சம்மாள் இணையருக்கு 22-03-1931 ஞாயிறு அன்று தோன்றியவர்கள். சிதம்பரம் தலத்தில் உள்ள காசி மடத்தின் கிளைமடத்தில் தங்கி பச்சையப்பன்பள்ளியில் கல்வி பயின்றார். தருமையாதீனத்தில் எழுத்தாளராகப் பணியாற்றினார்.

தருமையாதீனம் 25 ஆவது குருமணிகளால் 1953 ஆம் ஆண்டு துறவும் முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் என்னும் தீக்கை நாமமும் வழங்கப்பட்டது. தருமையாதீனத்தின் பல்கலைக் கல்லூரியில் தமிழ் பயின்று வித்துவான் பட்டம் பெற்றார். குரு, இலிங்க, சங்கம வழிபாடும், திருமுறைப் பாராயணமும் செய்து மாயூரம் குமரக்கட்டளை, தருமையாதீனத்தின் சீகாழி திருக்கோயில் கட்டளை விசாரணையாகத் தொண்டாற்றி வந்த சுவாமிகளை 1960 ஆம் ஆண்டு காசி மடத்தின் 20 ஆம் அதிபர் சீர்வளர்சீர் காசிவாசி அருணந்தித் தம்பிரான் சுவாமிகளால், காசிமடத்தின் இளவரசாக நியமித்தார்கள். 1972 ஆம் ஆண்டு 21 ஆம் அதிபராகப் பொறுப்பேற்றார்கள். கேதாரம், காசி முதல் இராமேசுவரம் வரையிலான சிவப்பணிகளையும், கல்வி, அன்னதானம் முதலாய அறக்கட்டளைப் பரிபாலனத்தையும், புதிய அறக்கட்டளைகளை ஏற்படுத்தியும் அருளாட்சி செய்து வந்த அதிபரவர்கள், காசிமடத்திற்குச் சொந்தமான பள்ளிகள், கலைக் கல்லூரிகளை ஒருங்கிணைத்து குமரகுருபர் கல்விக்குழுமம் ஏற்படுத்தினார்கள்.

1978 இல் குமரகுருபரர் சமய இலக்கியத் திங்களிதழினைத் தொடங்கினார்கள். 15-07-1982 அன்று **"கயிலைக் காட்சி"** கண்டார்கள். இதன் நினைவாக, தருமையாதீனம் 26ஆவது குருமகாசந்நிதானம் அவர்களிடம் **'கயிலைமாமுனிவர்'** எனும் விருதும் பெற்றார்கள். 1991 ஆம் ஆண்டு



மணிவிழாக் கண்டார்கள்.

தருமையாதீனம் 27 ஆவது குருமகாசந்நிதானம் அவர்களிடம் 28-05-2020 அன்று துறவறம் பெற்று, தருமையாதீனத்தின் திருக்கூட்டத்து அடியவராக சமய தீக்கை, விசேட தீக்கை, சொக்கலிங்கபூசை, ஞான தீக்கை பெற்றுள்ள சீர்வளர்சீர் சபாபதித் தம்பிரான் சுவாமிகளை, நட்சத்திரக் குருமணிகளின் அருளிசைவுடன் காசிமடத்திற்கு 24-06-2020 அன்று காறுபாறு ஆக நியமித்தார்கள். தொடர்ந்து 25-01-2021 அன்று தம் வாரிசாக நியமித்து உயில் எழுதிப் பதிவு செய்தார்கள். 01-09-2021 அன்று காசிமடத்தின் இளவரசாகப் பதவியளித்தார்கள்.


இவரது பெரும் தொண்டுகளில் ஒன்று, இளைய தலைமுறையினரைத் துறவுப் பணிக்கு ஊக்குவித்து, கல்வியிலும் தகுதியிலும் முன்னேறச் செய்வதாய் இருந்தது. அந்த முயற்சியின் விளைவால் தோன்றியவரே தருமை ஆதீனத்தின் 27 ஆவது குருமகாசந்நிதானம் **சீர்வளர்சீர் மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்.** இதனை குருமகாசந்நிதானம் அவர்கள் **"நாம் துறவு ஏற்க வழிவகுத்து 'காறுபாறு' பதவியும் கொடுத்து, முதுகலை மற்றும் முனைவர் பட்டங்கள் படிக்க வைத்து, கல்லூரியில் உதவி பேராசிரியர் பணி வழங்கியவர். முதன்முதலில் கயிலைக்காட்சி காண வழிவகுத்தவர்"** என்று தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டிருந்தார்.

இவ்வாறு செந்தமிழ், கல்வி, கலை, சமூக, சமுதாய, சமய ஒற்றுமை, மத நல்லிணக்கப் பணி புரிந்து, காசிமடத்தைப் பிற மாநிலங்களிலும், அயல்நாடுகளிலும் அறிந்து போற்றத் தக்க வகையில் மிளிரச் செய்து, 53 ஆண்டுகள் அருளாட்சி செய்த சீர்வளர்சீர் காசிவாசி எசமான் சுவாமிகள், வயது முதிர்வு மற்றும் உடல் நலக்குறைவு காரணமாகக் கடந்த 19-08-2025 செவ்வாய்க்கிழமை அன்று இரவு 7.59 மணிக்கு திருவடிப்பேறு அடைந்து சிவனடி சேர்ந்துள்ளார்கள்.

கயிலைமாமுனிவர் சீர்வளர் காசிவாசி முத்துக்குமாரத் தம்பிரான் சுவாமிகள் திருமேனியை, தருமையாதீனம், 27 ஆவது குருமகா சந்நிதானம் சீர்வளர்சீர் மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளவர்கள் நெறி காட்டலின்படி, முன்னோர் திருமுன் வளாகத்தில் எழுந்தருளச் செய்து மரபுவழிப்படி சமாதி செய்யப்பெற்று நாள்தோறும் இரு வேளைகளிலும் சிறப்பு வழிபாடுகள் நிகழ்த்தப் பெறுகின்றன.


வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து, மறைந்துள்ள பெருமகனாரின் திருவடிகளை வணங்கி, அவரின் உயிர் எம்பெருமான் திருவடிகளைப் பற்றி நிலைபெற்றிட வேண்டுவதோடு, இத்தகைய மெய்யான சைவக் குருபீடத்தைக் கனிந்த ஆன்மீகத் தகுதியும், மரபு மீதான பண்புணர்வும் கொண்ட பின்தோன்றலான சீர்வளர்சீர் சபாபதித் தம்பிரான் சுவாமிகளால் சிறப்புற வழிநடத்தப்படுவதற்கும் எல்லாம் வல்ல அருள்மிகு மனோன்மணி அம்மன் உடனுறைஐம்பூதநாதப் பெருமானிடம் பணிவுடன் விண்ணப்பம் செய்கிறோம்.

**திருச்சிற்றம்பலம்**





# காசிவாசி எசமான் சுவாமிகள் திருவடிப்பேறு எய்திய 10ஆம் நாள் வழிபாடும் இளவரசு, அதிபராக பீடம் ஏறுதலும்



திருப்பனந்தாள் காசிமடத்தின் 21ஆவது அதிபர் கயிலைமாமுனிவர் காசிவாசி முத்துக் குமரத் தம்பிரான் சுவாமிகள் திருவடிப்பேறு எய்திட்ட 10 ஆம் நாள் வழிபாடும், இளவரசு சீர்வளர்சீர் சபாபதித் தம்பிரான் சுவாமிகள் அதிபராக பீடம் ஏறல் வழிபாடும், தருமை ஆதீனத்தின் 27 ஆவது குருமகாசந்நிதானம் சீர்வளர்சீர் மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் அருளாணையின் வண்ணம் கடந்த 28-08-2025 அன்று, திருப்பனந்தாள் காசி மடத்தில் இடம்பெற்றது.

28-08-2025 அன்று காலை முன்னோர் திருமுன்களின் வளாகத்தில் உள்ள 21 ஆம் அதிபரின் மூர்த்தத்தில் சிறப்பு வழிபாடுகள் ஆற்றப்பட்டு அதனைத் தொடர்ந்து, சீர்வளர்சீர் காசிவாசி முத்துக் குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள், தம்முடைய வாரிசாக முன்பு நியமித்த சீர்வளர்சீர் சபாபதித் தம்பிரான் சுவாமிகள் காசிமடத்தின் காறுபாறு ஆக ஓராண்டும், இளவரசாக 4 ஆண்டுகளும் பதவி வகித்து, திருமடத்தின் அனைத்து நிர்வாகத்தையும் முழுப் பொறுப்புடன் திருத்தமாக நடத்தியதால், 25-01-2021 ஆம் நாள் ஏற்படுத்தப்பட்ட உயிலின் மூலமாக, 21 ஆம் அதிபர் அவர்களுடன் துணையாக சின்னப் பட்டமாக இருந்த இவர்கள், 28-08-2025 அன்று அருள்மிகு சொக்கநாதர் பூசை மடாலயத்தில் வழிபாடாற்றி காசி மடத்தின் 22 ஆம் அதிபராக அருளாட்சி பீடம் ஏற்கும் நிகழ்வு காசி மடத்தின் அட்டலெக்குமிக் கட்டில் மரபுப்படி இடம்பெற்றிருந்தது.

தொடர்ந்து திருமுறை செப்பேடு கண்டருளிய 27 ஆவது குருமகாசந்நிதானம் சீர்வளர்சீர் மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பராமாசாரிய சுவாமிகள் அவர்களிடம் அருளாசி பெற குரு, இலிங்க, சங்கம வழிபாட்டிற்கு காசிமடத்தின் 22



ஆம் அதிபர் ஆவணி மூலத்தன்று (02-09-2025) குருபீடம் தருமையாதீனத்திற்கு முதல் யாத்திரையும் மேற்கொண்டு அருளாசி பெற்றுள்ளமைக் குறிப்பிடத்தக்கது.

**திருச்சிற்றம்பலம்**







# அருட்குருநாதர் மறைமலையடிகள் 75ஆம் ஆண்டு குருபூசை விழா






அருட்குருநாதர் சிவத்திரு. மறைமலையடிகள் அவர்களின் 75ஆம் ஆண்டு குருபூசை விழா கடந்த 17-08-2025 அன்று, சென்னை கமல விநாயகர் சத்சங்க வளாகத்தில் ஆன்மீக மகிழ்ச்சியுடன் நடைபெற்றது. விழா, அருட்குருநாதர் கயிலைமாமணி சைவத்தமிழ்மணி ஒளியகம் சிவத்திரு ந.ஒளியரசு ஐயா தலைமையில், சிவத்திரு மறை தாயுமானவன் அவர்கள் முன்னிலையில் சிறப்புற நடத்தப்பட்டது.

அருட்குருநாதர் ஐம்பொன் திருமேனிக்கு வேள்வி வழிபாடு மற்றும் திருநெறிய தமிழ்முறை நன்னீராட்டு நடைபெற்றது. பவானி சிவனடியார் திருக்கூட்டம் சார்பில், **தருமபுர ஆதீன குருமுதல்வர் சீர்வளர்சீர் குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள்** அருளிய சொக்கநாத வெண்பா வெளியீட்டு விழாவும் நிகழ்ந்தது. இதனை திருவாசக செந்நாவலர் மயிலை ஓதுவார் பா. சற்குருநாதன் ஐயா குரலில் விரலியாக வெளியிட்டிருந்தனர்.

பின்னர் நடைபெற்ற சொற்பொழிவு அமர்வில் ஞானாசிரியர்கள் சிவத்திரு. ப. குமரலிங்கம், சிவத்திரு. அ.தியாகராசன், சிவத்திரு. அ.மோகன்ராசு ஆகியோர் முறையே மறைமலை அடிகளின் மொழித்திறன், சைவத்திறன், உரைத்திறன் குறித்து சிறப்புரையாற்றினர். திரளான பத்தர்கள் பங்கேற்று, அருட்குருநாதரின் திருவடிகளை வணங்கி ஆனந்தமடைந்தனர்.

**திருச்சிற்றம்பலம்**

# சிவத்திரு. ந. சிவபாலகணேசன் ஐயா அவர்களின் நினைவேந்தல் வழிபாடு





இலங்கை சைவநெறிக் கழகத்தின் முன்னெடுப்பில், சித்தாந்தரத்தினம், திருமுறைநெறிச் செல்வர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சைவசித்தாந்த முதுகலைமாணி, சித்தாந்தப் பேராசான், இலங்கை சைவநெறிக் கழக ஆலோசகர், திருவாவடுதுறை ஆதீன யாழ்ப்பாணச் சைவசித்தாந்த நேர்முகப் பயிற்சி மையத் தலைமை ஆசிரியர் சிவத்திரு நடராசா சிவபாலகணேசன் பெருமகனார் அவர்களின் நினைவேந்தல் வழிபாடும், சைவத்தமிழ்ச் சமூகம் போற்றுவாம் அரங்கும், கடந்த 24.08.2025 ஞாயிற்றுக்கிழமை அன்று மாலை 4.30 மணி முதல் 6.30 மணி வரை கொழும்புத் தமிழ்ச் சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் மிகப் பத்திபூர்வமாக நடைபெற்றது.

நிகழ்வில் பல்வேறு சைவப்பெருமக்கள் பங்கேற்று, ஐயா அவர்களின் சைவச் சேவைகளை நினைவுகூர்ந்து போற்றினர். **"சைவ சமுதாயத்தை உயர்த்துவதற்கான சிந்தனைக் களமாகவும், செயற்றிட்டக் களமாகவும் இந்த நிகழ்வு விளங்கட்டும்"** என்ற கருத்தோடு, அவரது பணிவாழ்வை எடுத்துரைத்தனர். இந்த நினைவேந்தல் வழிபாட்டின் மூலம், சைவத்தமிழ் பெரியோரின் வழியில் ஒன்றிணைந்து சைவ சமுதாய முன்னேற்றத்திற்காகச் செயலாற்றுவோம் என்ற உறுதி அனைவரிடமும் வலுப்பெற்றது.

**திருச்சிற்றம்பலம்**



# பூநகரி வைத்தியசாலையில் புதிய திருக்கோயிலிற்கான அடிக்கல் நாட்டல்

தென்னாடு சைவ மாணவர் சபையின் திருக்கோயில் அமைத்தல் திருப்பணியின் தொடர்ச்சியாக பூநகரி பிரதேச வைத்தியசாலையில் புதிய திருக்கோயில் அமைப்பதற்குத் திருவருள் கூடியுள்ளது. இத்திருக்கோயிலானது, பூநகரி பிரதேச வைத்தியசாலை நிர்வாகத்தினரால் 21-04-2025 அன்று, தென்னாடு சைவ மாணவர் சபையிடம் விண்ணப்பம் வைத்தமைக்கிணங்க, ஒசுத்திரேலியா சிட்னியில் வசிக்கும் கனகரத்தினம் சுதர்மன் குடும்பத்தினரின் (KST பல்பொருள் வாணிபம்) முழுமையான நிதிப்பங்களிப்பில் அமையப் பெறவுள்ளது.





இக்கோயிலிற்கான அடிக்கல் நாட்டல் வழிபாடுகள் கடந்த 24-08-2025 அன்று இடம்பெற்றிருந்தது. இவ்வழிபாட்டில் கொடையாளரின் தாய், தந்தை மற்றும் உறவினர்கள், மறவன்புலவு தவத்திரு. க. சச்சிதானந்தம் ஐயா அவர்கள், பூநகரி பிரதேச வைத்தியசாலை நிர்வாகத்தினர், சிவத்திரு. பிரபாகரன் கருப்பையா (மத்திய வங்கி) அவர்கள் மற்றும் தென்னாடு சைவ மாணவர் சபையினர் எனப் பலரும் கலந்து சிறப்பித்திருந்தனர்.

# நுவரெலியாவில் இடம்பெற்ற திருவாசக முற்றோதல் நிகழ்வு



இலங்கை, நுவரெலியா, உடப்புசல்லாவை, லுணுவத்தை லக்கிலேண்ட் குரூப், கொண்டகொல தோட்டம் அருள்மிகு சிவசுப்பிரமணியர் சுவாமித் திருக்கோயிலில் கடந்த 31-08-2025 ஞாயிற்றுக்கிழமை அன்று, திருவாசக முற்றோதல் நிகழ்வு சிறப்பாக நடந்தேறியுள்ளது. இந்நிகழ்வானது இலங்கை, மலையக தோட்டங்களில் 2025 ஆம் ஆண்டு நடைபெற்ற நான்காவது திருவாசகம் முற்றோதுதல் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வில் கொண்டகொல அருள்மிகு மீனாட்சி அறநெறி பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் தோட்ட மக்களும் பங்கேற்றனர். இந்த முற்றோதல் நிகழ்வினை கோயில் அர்ச்சகர், நிர்வாகத்தினர், அறநெறி பாடசாலை ஆசிரியர்கள், பெற்றோர்கள் இணைந்து ஒழுங்கு செய்து, பங்கு பற்றிய அனைவருக்கும் சிற்றுண்டிகள், மதிய உணவு என்பனவற்றையும் வழங்கி சிறப்பித்தனர்.

மேலும் முற்றோதுதலில் பங்குபற்றிய 13 வயதிற்கு மேற்பட்ட 41 பேருக்கு தமிழ்நாடு, கோயம்புத்தூர் **"அரன் பணி அறக்கட்டளை"** வெளியீடான **"திருவாசகம்"** நூலினை கோயில் நிர்வாகத்தினர் இலவசமாக வழங்கி வைத்திருந்தனர்.

**"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்"**

**திருச்சிற்றம்பலம்**

# சொற்சிலம்பம்-6

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 02 | | | ■ | 03 | | 04 |
| 05 | | | | | | ■ | |
| | | ■ | 06 | | | ■ | |
| | | ■ | 07 | | | ■ | |
| ■ | | ■ | | ■ | ■ | ■ | |
| 08 | | | | | ■ | 09 | |
| | ■ | ■ | 10 | | 11 | | ■ |
| 12 | | | ■ | 13 | | | |

### இடமிருந்து வலம்

*01.* சைவசமய நடைமுறைகளை வகுத்து சொல்வது
*02.* காலத்தால் அளவிட முடியாதது
*05.* விநாயகர்
*06.* தெய்வீக உலோகம்
*07.* அறியாமை களைவது (குழம்பி)
*08.* தீமை அல்லது துன்பம்
*09.* இறைவனை வழிபட அனைவரும் இடும் பொருள் (திருமந்திரம் சொல்வது)
*10.* ஒருவர் எழுதும் நூலுக்கு பிறிதொருவர் எழுதும் சிறப்பித்தல் பா.
*12.* இது ஒடுங்கினால் தியானம் கிட்டும்
*13.* உ. வே சாமிநாதையர் செய்த பெரும்பணி

### மேலிருந்து கீழ்

*01.* ஆன்மீக மையம்
*02.* உலகின் மிகப்பெரிய சிவன்கோயில் அமைந்திருப்பது.
*03.* சிவம்
*04.* தென்கயிலை
*06.* ஈழத்து சித்தர்களில் ஒருவர்
*08.* அழகு
*11.* காமனின் மனைவி

**பாடசாலை மாணவர்கள், மேலே உள்ள சொற்சிலம்பத்தை பிரதிசெய்து, அதனைப் பூர்த்தி செய்து, பாடசாலை அதிபரின் உறுதிப்படுத்தலுடன், உங்கள் முழுப்பெயர், கல்விகற்கும் தரம் மற்றும் பிரிவு, தொடர்பு இலக்கம், முகவரி என்பவற்றுடன் வங்கி கணக்குப் புத்தகத்தின் முதல்பக்க பிரதியையும் இணைத்து அனுப்பி வைக்கவும். மேற்குறிப்பிட்ட தகவல்கள் பூரணப்படுத் தப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். வெற்றியாளர்களுக்கு 500/- ரூபாய் பணப்பரிசிலும் அனுப்புதல் தபால் செலவும் வழங்கப்படும். அனுப்பும் போது கடிதஉறையின் மேல்மூலையில் 'சொற்சிலம்பம்' என்று குறிப்பிட்டு அனுப்பவும்.**

**அனுப்பவேண்டிய இறுதித் திகதி:**
**புரட்டாசித் திங்கள் 14ஆம் நாள் (30-09-2025)**

**அனுப்ப வேண்டிய முகவரி:**

**தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம்,**
**தென்னாடு வீதி, கொக்குவில் கிழக்கு,**
**கொக்குவில், யாழ்ப்பாணம்.**
+94 21 222 9722 | +94 70 770 1111

# சொற்சிலம்பம்-5

**(கடந்த திங்கள் சொற்சிலம்பத்திற்கான விடைகள்)**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01 ந | க் | கீ | ர | ன் | ■ | 02 தி | ரு |
| 03 வ | ட | க் | கு | ■ | 04 ச | த் | தி |
| க் | ■ | ■ | ■ | 05 ப | ங் | கு | னி |
| கி | ■ | 06 வி | ■ | த | க | 07 ந | ■ |
| ர | ■ | ல் | ■ | ந் | ர | டு | 08 சே |
| க | ■ | வ | 09 சி | ச | ன் | க | யோ |
| ம் | ■ | ம் | வ | லி | ■ | ல் | ன் |
| ■ | 10 வே | ■ | ன் | ■ | 11 கா | ■ | ■ |

### இடமிருந்து வலம்

*01.* திருமுருகாற்றுப்படை பாடியவர்
*02.* செல்வம்
*03.* வாமதேவ முகம் நோக்கும் திசை
*04.* கொற்றவை தெய்வத்தின் வடிவம்
*05.* மீனராசியை குறிக்கும் மாதம்
*10.* மூங்கில்

### மேலிருந்து கீழ்

*01.* சிவனை வணங்கினால் இவை நன்மை செய்யும்
*04.* இன்பத்தை வழங்குவதால் சிவனின் நாமம்
*05.* யோகக்கலையை முறையாக வகுத்த சித்தர்
*06.* நல்லூர் கோயிலின் தலவிருட்சம்
*07.* சங்ககால வீரர்களை புதைத்த இடத்தில் நடுவது
*08.* முருகனின் திருப்பெயர்களில் ஒன்று
*09.* தாண்டவ மூர்த்தி
*11.* சோலை

### பரிசில் பெறுபவர்கள்

*தென்னாடு சொற்சிலம்பம் - 5 இல், 29 மாணவர்கள் பங்குபற்றியிருந்தனர். அவர்களில் ஒருவர் மட்டுமே அனைத்து விடைகளையும் சரியாகப் பூர்த்தி செய்து அனுப்பியதால், பரிசில் பெறுகிறார்*

**செல்வி. பாஸ்கரன் கேதுஜா**
**கிளி / கண்டாவளை மகா வித்தியாலயம்**

# தென்னாடு வாசிப்போம் பரிசில்கள் பெறுவோம்

மாணவர்களின் சைவ சமய அறிவினை மேம்படுத்தவும், தமிழர் வழிபாட்டு விழுமியங்களை வெளிக்கொண்டு வரவும், ஒவ்வொரு நிறைமதிக்கும், கொக்குவில் தென்னாடு செந் தமிழ் ஆகம சிவமடத்தினால் வெளியிடப்படும் தென்னாடு திங்கள் இதழினை கருத்துடன் வாசிக்கும் பழக்கத்தினை மேம்படுத்தும் நோக்குடன் இந்த பரிசில் திட்டம் ஆரம்பிக் கப்பட்டிருக்கிறது.

பாடசாலை மாணவர்கள், பின்வரும் கேள்விகளுக்கு, ஆவணித் திங்கள் 60 ஆவது தென்னாடு திங்கள் இதழில் இருந்து பதில்களை எழுதி, பாடசாலை அதிபரின் உறுதிப் படுத்தலுடன், உங்கள் முழுப்பெயர், கல்விகற்கும் தரம் மற் றும் பிரிவு, தொடர்பு இலக்கம், முகவரி என்பவற்றுடன் வங்கி கணக்குப் புத்தகத்தின் முதல்பக்க பிரதியையும் இணைத்து அனுப்பி வைக்கவும். மேற்குறிப்பிட்ட தகவல்கள் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். வெற்றியாளர்களுக்கு 500/- ரூபாய் பணப்பரிசிலும் அனுப்பு தல் தபால் செலவும் வழங்கப்படும். அனுப்பும் போது கடித உறையின் மேல்மூலையில் 'தென்னாடு வாசிப்போம்' என்று குறிப்பிட்டு அனுப்பவும்.

**கேள்விகள்:**

1. **நட்சத்திரப் பிறந்தநாள் கொண்டாடுவதின் தெய்வீக நோக்கங்கள் என்ன?**
2. **நட்சத்திரப் பிறந்தநாளின் சிறப்பினை சுருக்கமாக எழுதுக?**
3. **இராசேந்திர சோழனின் ஆடித்திருவாதிரைப் பிறந்த நாள் விழாவில் பிரதமர் ஆற்றிய உரையில் கூறப்பட்ட சோழர்களின் பெருமைகளை எழுதுக ?**
4. **தருமபுர ஆதீனம் அவர்கள் பிரதமரிடம் முன்வைக்கப் பட்ட வேண்டுகோள்கள் எவை?**
5. **'தென்றமிழ் பயன்' என்ற நூலை எழுதியவர் யார்? எந்த விழாவில் வைத்து வெளியிடப்பட்டது? முதல் பிரதியை வெளியிட்டது யார்? முதல் பிரதியைப் பெற்றது யார்?**
6. **சண்டேசுவரர் உற்சவத்தில் சண்டேசுவரரை மிக வேகமாக வும், ஆரவாரத்துடனும் கொண்டுசெல்லுதல் முறையா? என்பதற்கான விளக்கத்தை சுருக்கமாக எழுதுக?**
7. **திருமணம் நடைபெற வழிவகுக்கும் திருத்தலம் எது? அவ்வாறு அத்தலம் அழைக்கபடக் காரணம் யாது?**
8. **திண்ணனாரின் அன்பு பெருக்கைச் சிவகோச்சாரியாருக்கு உணர்த்த சிவன் அவரின் கனவில் தோன்றியதை எடுத் துரைக்கும் பாடலடியை வரிக்கிரமமாக எழுதுக?**
9. **தமிழ்மொழிக் கந்தபுராணமே மேலான இறைவாக்கு என்ப- தனைக் கச்சியப்ப சிவாச்சாரியார் உணர்த்திய செய்யுளை வரிக்கிரமமாக எழுதுக.**
10. **'ஐந்தாண்டு நிறைவில் தென்னாடு திங்கள் இதழ் - தொடரும் அறிவியல் மரபு' என்ற ஆசிரியர் தலைப்பு கட்டுரையின் கருத்தை ஐந்து வரிகளில் சுருக்கமாக எழுதுக?**

**அனுப்ப வேண்டிய இறுதித் திகதி:**
**புரட்டாசித் திங்கள் 14 ஆம் நாள் (30-09-2025)**

**அனுப்ப வேண்டிய முகவரி:**
**தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம்,**
**தென்னாடு வீதி, கொக்குவில் கிழக்கு,**
**கொக்குவில், யாழ்ப்பாணம்.**
+94 21 222 9722 | +94 70 770 1111

# கடந்த இதழின் 'தென்னாடு வாசிப்போம்' போட்டியில் பரிசில் பெறுபவர்கள் விபரம்

ஆவணித் திங்கள் 60 ஆவது இதழ் **'தென்னாடு வாசிப்போம்'** போட்டியில் பங்குபற்றி பரிசில் பெறும் மாணவர்க ளின் விபரங்களை இங்கு பதிவிட்டுள் ளோம்.

**யா/கோண்டாவில் இந்துக் கல்லூரி**

1. செல்வன். சுதன் பவசரண்யன்
2. செல்வி. பிரிந்தினி குணரத்தினம்
3. செல்வி. அஸ்மியா ஜெயசுதன்
4. செல்வி. ரேனுஜா டில்ஸ்சன்
5. செல்வி. கிஷானா சுதேஸ்குமார்
6. செல்வி. யஸ்வினி நிரஞ்சன்
7. செல்வி. அபர்ணா ஜோர்ச்கரிசன்

**யா/ வட்டு மத்திய கல்லூரி**

1. செல்வி. அபிதா அன்பழகன்

**தி/கன்னியா இராவணேஸ்வரன் தமிழ் வித்தியாலயம்**

1. செல்வன். தேவலிங்கம் ரிஷிகேசன்

# சிவபூமியில் சிவனைத் தேடி

## 2000 ஆண்டுகள் பழமையான நாகர் வழிபாட்டுடன் தொடர்புடைய அம்பாறை கஞ்சிக்குடிச்சாறு நாகர் மலைக்கோயில்கள்



கல் வேல் உள்ள கோயில்

**(சென்ற திங்கள் தொடர்ச்சி)**


**"இன்று வரை இலங்கையில் கிடைத்துள்ள நாகர் பண்பாட்டுச் சின்னங்களிற் கஞ்சிக்குடிச்சாற்றில் உள்ளவையே மிகுந்த முக்கியத்துவம் பெற்றவை"** என்று இலங்கைத் தமிழர் வரலாற்று நூலில் பேராசிரியர் சி. பத்மநாதன் பதிவு செய்துள்ளார். அவரால் மேற்கொண்ட ஆய்வின் பலன் ஆற்றுக் கரையோரமாக அமைந்துள்ள மலைத்தொடரின் பண்பாட்டுச் சின்னங்களை அடிப்படையாகக் கொண்டவையே ஆகும்.

ஆனால் ஆற்றின் வடக்குப்பக்கமாக சுமார் 200மீற்றர் தூரத்தைக் கடந்தால் அங்கும் ஏராளமான தொல்பொருட்



ஐந்து தலையுள்ளஆதிநாகவடிவம்

சின்னங்கள் சிதைந்தவண்ணம் காணப்படுகின்றன. ஆற்றுப் படுக்கையை நோக்கிய வண்ணம் கட்டட இடிபாடுகள் காணப்படுகின்றன. அங்கு தூண் தாங்கும் கற்பீடங்கள் பலவுள்ளன. அவற்றில் ஒரு தூண் தாங்கும் கல்லின் முகப்பில் **"மணிணாகன் பள்ளி"** எனப் பொறிக்கப்பட்டுள்ளது. அக்கல்லில் 'ணாகன்' என்பது தெளிவாகத் தெரிகின்றது. அக்கல்லே மிகவும் உயரமானதாக உள்ளது. ஏனைய தூண் தாங்கும் கற்கள் சிறியதாகவே உள்ளன. இவ்விடத்தில் வேல் நிறுவப்பட்ட முருகன் கோயில் ஒன்று அமைக்கப் பட்டுள்ளது. இவ்விடத்திற்கு எம்மை அழைத்துச் சென்ற பிரதேசவாசி கூறுகையில்.



சைவப்புலவர்
சுந்தரமூர்த்தி துஷ்யந்த்
கலைமாணி முதுகலைமாணி, பிரான்சு

**"இவ்விடம் நாங்கள் சிறுவயதாக இருக்கும் போது அடர்ந்த பற்றையாக இருந்தது. கற்தூண்கள் நிலை நிறுத்தியிருந்தது. செங்கற்கள் கொண்டு கட்டப்பட்ட வட்டமான கட்டடம் இருந்தது. சிறுமலையில் கல்வேல் இருந்தது. அதன் அருகாமையில் உள்ள கல்லொன்றில் படமெடுத்த நாகமிருந்தது. இப்போது இவற்றில் கொஞ்சம்தான் இருக்கிறது. யுத்தகாலத்தின் போது அவை அழிஞ்சு போயிற்று"** என்றார். இவரின் கூற்றுப்படி. இங்கு நாகர் வாழ்ந்திருப்பது உறுதியாகின்றது. நாகர்கள் தங்கள் தெய்வத்தை **"மணிணாகன்"** என்றே பெயரிட்டு வழிபட்டார்கள். அத்தெய்வம் கல்லில் செதுக்கப்பட்ட நாக பாம்பின் தலைவடிவமானது இத்தகைய வடிவங்கள் மட்டக்களப்பில் பல இடங்களில் கிடைத்துள்ளன. **"கல்லொன்றில் படமெடுத்த நாகம்"** என்று அவர் குறிப்பிட்டது மணிணாகன் தெய்வத்தையே ஆகும். அத்தகைய கருங்கற்கள் முருகன் கோயில் அத்திபாரத்தினுள் இடப்பட்டு கோயிலைக் கட்டியுள்ளனர். தற்போது சில கற்களை இக்கோயிலின் பாகங்களில் காணக்கூடியதாக உள்ளது. தற்போது வெளியில் கிடக்கும் பெரிய தூண் தாங்கும் கற்பீடத்தில் பொறிக்கப்பட்டுள்ள **"மணிணாகன் பள்ளி"** என்ற குறிப்பு இங்கு மணிணாகன் தெய்வத்திற்கு கோயில் நிறுவி வணங்கிய



'ணாகன்' பெயர் பொறிக்கப்பட்டதூண் தாங்கும் கல்



பழைய கோயில் கட்டட சிதைவுகள்

வழக்கம் நிலவியிருப்பதைச் சுட்டிக் காட்டுகின்றது.

இங்கு கல்லாலான வேல் இருந்திருப்பதனைக் கொண்டு நாகர்களிடத்தில் வேல் வழிபாடு இடம் பெற்றிருக்க வாய்ப்புள்ளது. இன்று இவ்விடத்தில் அமைந்துள்ள வேலோடு அமைந்துள்ள முருகன் கோயில் சான்று பகர்கின்றது. இக் கோயிலின் அருகில் மலைகளை வெட்டி நீள அகலத் தூண்டங்களாகக் காட்சியளிக்கும் கற்பலகைகளும் காணப் படுகின்றது. கற்பலகையின் விளிம்புகள் மிகவும் நேர்த்தி யாக வெட்டப்பட்டுள்ளது. சில கற்பலகைகளின் மூலைகள் சிதைந்தும் காணப்படுகின்றது. இத்தகைய கற்பலகை களை கித்துள், குடும்பிமலை, சங்கமன் கண்டி, கல்லடிச் சேனை முதலிய இடங்களிலும் காணலாம். இவை நாகர்கள் மலைகளைப் பிளந்து, தூண்டங்களாகப் பலகைகளாக வெட்டி தங்கள் தேவைக்குப் பயன்படுத்துகின்ற அவர் களின் தொழில்நுட்ப ஆற்றலையே வெளிப்படுத்துகின்றது. கஞ்சிகுடிச்சாறு குகைக் கோயில்களை அடுத்து நாகர்களின் வழிபாட்டுச் சின்னங்களையும், குடியிருப்பு அடையாளங்க ளையும் காணக்கூடிய இடமாக இவ்விடம் அமைந்துள்ளது.

## நாகர் கோயில்

கஞ்சிகுடிச்சாறு ஆறு, மலை, வயல், காடு என இயற்கை வளங்கள் கொட்டிக்கிடக்கும் கிராமமாகும். ஆற்றின் படுக்கை யோரம் உயரமான மலைத் தொடரொன்று காணப்படு கின்றது. அங்கு நாகர்கள் வடிவமைத்த குகைகளும் அவர்கள் போற்றிய மணிநாகன் தெய்வவடிவத்தையும் காணமுடியும். அம்மலையின் பின்புறமான இடத்தில் இரண்டு கோயில் கள் காணப்படுகின்றன. அவற்றுள் ஒன்று ஐந்து தலை நாக வடிவத்துடன் கூடிய சிறிய அம்மன் கோயில் சிறிய குன்றில் அமைக்கப்பட்டுள்ளது. அவ்வாலயத்தின் முன்பு அதைவிடப் பெரிய கூடாரக் கோயில் ஒன்று அமைந்துள்ளது. இங்குதான் நாகரின் அரிய சான்று ஒன்று, அம்மன் கோலத்தில் வடி வமைக்கப்பட்டு வணங்கப்பட்டு வருகின்றது.

இக் கோயிலின் கருவறையில் கறுப்பு நிறமான கல் வொன்று ஐந்து தலையைக்காட்டிய வண்ணம் விரிந்த நிலையில் நாகபாம்பு ஒன்று காணப்படுகின்றது, அப்பாம் பின் வயிற்றுப்பகுதியில் "மணிணாகன்" என்ற பெயர் பொறிக் கப்பட்டுள்ளது. இவ் நாக தெய்வம் சற்று வேறுபாடா னது. கீழைக்கரையோர தேசம் பலவற்றில் கருங்கல்லில் செதுக்கப்பட்டிருக்கும் நாக தெய்வங்களே அதிகமாகக் கிடைத்துள்ளன. இங்கு மட்டும் கருநிறத்தில் நாகவடிவம் வழக்கப்பட்டிருப்பது சிறப்பம்சமாகும். இது நாக இனத்தின் தனித்துவத்தைக் காட்டுகின்றது. நாகர் குலத்தின் தலைவன் வாழ்ந்த இடமாகவும், பெரும் வழிபாட்டுக்குரிய இருப்பிட மாகவும் கஞ்சிக்குடிச்சாறு விளங்கியிருக்க வாய்ப்பிருக்க லாம்.

பொதுவாக நாகர்கள் தாங்கள் பூசிக்கும் வழிபடு கடவுளை மணிணாகன் என்றே குறிப்பிட்டனர். அவர்கள் ஆதியில் ஐந்து தலைகளை உடைய நாகத்தையே மணிணாகனாகக் கருதியிருந்தனர். அந்த நாகத்தின் உருவத்தினையே கருங் கல்லில் சிற்பங்களாக வடிவமைத்துப் போற்றினார்கள் இவை பெரும்பாலும் மலைகளில் உள்ள பாறைகளிலேயே பார்க்க முடியும். அந்த வகையில் கஞ்சிகுடிச்சாறில் அமைந் துள்ள சிற்பமும் அத்தகைய தொன்றே, இதுவும் மலையில் பொறிக்கப்பட்ட ஒன்றாக இருந்துள்ளது. இப்பிரதேசவாசி கள் இச்சிற்பத்தை மலையில் இருந்து பெயர்த்து இவ்விடத் தில் ஆதியான சுயம்பு இலிங்க அம்மனாகப் பூசித்து வரு கின்றனர். இவ் நாகவடிவம் ஆதியான நாகர்களின் வணக் கத்திற்குரிய புனித வடிவமாகும்.

இச் சின்னம் பேணிப்பாதுகாக்கப்பட வேண்டிய தொன்று. இது சுமார் 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட நாகரின் வழிபாட்டு கடவுளாகும். இதன் அருமை பெருமைகளை அறிவதற்கும், இங்கு வழிபாடுகள் தொடர்ச்சியாக இடம் பெறுவதற்கும் இப்பிரதேச இந்து சமய கலாசார அதிகாரிகள் ஊக்கம் கொடுக்க வேண்டும்.

திருச்சிற்றம்பலம்

# அடியார் பெருமையின் ஆவண ஊற்று - பெரிய புராணம்:

## ஞாலம் உய்ய எழுந்தருளும் நம்பி தம்பிரான்தோழர்




**"சுந்தரத் திருத்தொண்டத் தொகைத்தமிழ்
வந்து பாடிய வண்ண முரைசெய்வோம்"**

### காஞ்சிவாய்ப் பேரூரில் தில்லைத் திருக்காட்சி

சுந்தரனார் கொங்கு தேசத்திலுள்ள காஞ்சிவாய்ப் பேரூரைச் சென்றடைகின்றார். கோயிலில் புகுந்து, எதிர்கொள்ளும் அடியவர்களோடு திருச்சன்னிதியை வலமாய்ச் சென்று வணங்கியவாறு இறைவரின் திருமுன்பு செல்ல, பட்டீசுவரப் பரம்பொருள் தில்லைத் திருக்கோலம் காட்டிப் பேரருள் புரிகின்றார். தம்பிரான் தோழர் உச்சி கூப்பிய கையினராய்க் கண்ணருவி பாய, அம்பலவாணரின் பேரானந்தத் திருக் காட்சியினைக் கண்களாரத் காண்கின்றார்.

**அத்திருப்பதியை அணைந்து முன்தம்மை ஆண்டவர் கோயிலுள் புகுந்து
மெய்த்தவர் சூழ வலம்கொண்டு திருமுன் மேவுவார் தம்மெதிர் விளங்க
நித்தனார் தில்லை மன்றுள் நின்றாடல் நீடியகோலம் நேர்காட்டக்
கைத்தலம் குவித்துக் கண்கள் ஆனந்தக் கலுழிநீர் பொழிதரக் கண்டார்**
**- (ஏயர்கோன் கலிக்காமர் புராணம்: திருப்பாடல் 89)**

நிலமிசை வீழ்ந்துப் பணிந்து சிற்சபேச மூர்த்தியின் அற்புதக் காட்சியைக் கணநேரமும் பிரிய மாட்டாதவராய் உடனெழுந்து தொழுகின்றார். ஆடல்வல்லானின் மீதுள்ள காதலோ கரைகாணாது என்பும் உருகுமாறு பல்கிப் பெருகிய வண்ணமிருக்கின்றது. புலன்களுக்கு எட்டாத சிவானந்தப் பெருவெள்ளத்தில் அமிழ்ந்துத் திளைக்கின்றார். **"சைவமுதல் தொண்டரான நம் நம்பிகள் பெருமானார் பெற்றுள்ள இவ்வரிய அனுபவத்தை யாரே விளக்கவல்லார்"** என்று தெய்வச் சேக்கிழார் வியந்து போற்றுகின்றார்.

**காண்டலும் தொழுது வீழ்ந்து உடனெழுந்து கரையில்அன்பு என்பினை உருக்கப்
பூண்ட ஐம்புலனில் புலப்படா இன்பம் புணர்ந்து மெய்யுணர்வினில் பொங்கத்
தாண்டவம் புரியும் தம்பிரானாரைத் தலைப்படக் கிடைத்தபின் சைவ
ஆண்டகையாருக்கு அடுத்த அந்நிலைமை விளைவை யார் அளவறிந்து உரைப்பார்**
**- (ஏயர்கோன் கலிக்காமர் புராணம்: திருப்பாடல் 90)**

ஒருவாறு தன்னிலை பெற்றவராய்ப் பேரூருறை முதல்வரின் தில்லைத் திருக்காட்சியைப் பாமாலையால் போற்றிப் பரவுகின்றார். விளக்கவொண்ணா அனுபவ நெகிழ்ச்சியில் மிகவும் தன்னிறைவு பெற்றவராய் 'பொற்சபை நாயகரின் அற்புதத் திருக்கோலத்தினை இந்நிலையில் தரிசிக்கப்




பெற்ற பின்னர் இனிப்புறத்தே அடைவதற்குப் பிறிதொன்றும் உளதோ' என்று நெகிழ்ந்துருகுகின்றார்.

அந்நிலை நிகழ்ந்த ஆரருள் பெற்ற அன்பனார் இன்ப வெள்ளத்து
மன்னிய பாடல் மகிழ்ந்துடன் பரவி வளம்பதி அதனிடை மருவிப்
பொன்மணி மன்றுள் எடுத்த சேவடியார் புரிநடம் கும்பிடப் பெற்றால்
என்னினிப் புறம்போய் எய்துவதென்று, மீண்டெழுந்தருளுதற்கு எழுவார்.
(ஏயர்கோன் கலிக்காமர் புராணம்: திருப்பாடல் 91)

**(குறிப்பு: சுந்தரனார் அருளிச் செய்துள்ள இப்பேரூர் திருப்பதிகம் கிடைக்கப் பெறவில்லை)**

**கூடலையாற்றூர் தரிசனம் - வழித்துணையாய் வந்த இறைவர்**

சுந்தரர் திருமுதுகுன்றம் நோக்கிச் செல்லும் வழியில், கூடலையாற்றூர் தலத்தினைச் சேராதவராய் அதன் எல்லையைக் கடந்து மேலும் முன்னேறிச் செல்ல முனைகையில், ஆற்றூர் இறைவர் வேதியரின் திருவடிவு தாங்கி வன்தொண்டர் காணுமாறு எழுந்தருளி வருகின்றார். மறையவரை வணங்கி முதுகுன்றம் செல்லும் மார்க்கத்தினை வினவும் சுந்தரரிடம் இறையனார், 'கூடலையாற்றூருக்குச் செல்லும் வழி இதுவே' என்று பிறிதொரு மார்க்கத்தினைக் காண்பித்துப் பின் தாமே வழித்துணையாய் முன்னே செல்லத் துவங்குகின்றார்.

செப்பரும் பதியில் சேரார் திருமுதுகுன்றை நோக்கி
ஒப்பரும் புகழார் செல்லும் ஒருவழி உமையாளோடும்
மெய்ப் பரம்பொருளாய் உள்ளார் வேதியராகி நின்றார்
முப்புரி நூலும் தாங்கி நம்பியாரூரர் முன்பு
- (ஏயர்கோன் கலிக்காமர் புராணம்: திருப்பாடல் 101)

நின்றவர் தம்மை நோக்கி நெகிழ்ந்த சிந்தையராய்த் தாழ்வார்
இன்றியாம் முதுகுன்றெய்த வழி எமக்கியம்பும் என்னக்
குன்ற வில்லாளியாரும் கூடலையாற்றூர் ஏறச்
சென்றது இவ்வழிதானென்று செல்வழித் துணையாய்ச் செல்ல.
- (ஏயர்கோன் கலிக்காமர் புராணம்: திருப்பாடல் 102)

மறுமொழியேதும் புகலாமல், மந்திரத்திற்குக் கட்டுப்பட்டாற் போன்று, கூப்பிய கரங்களோடு நான்மறை நாயகரைத் தொடரும் தம்பிரான் தோழர், சிறிது நேரத்தில் முன்னாகச் சென்றிருந்த அந்தணரைக் காணாது திகைப்புறுகின்றார், வழித்துணையாய் வந்தருளியது ஆற்றூர் மேவும் ஆதி மூர்த்தியே என்றுணர்ந்து உளம் நெகிழ்ந்து, **'அடிகள் இவ்வழி போந்த அதிசயம் அறியேனே'** எனும் திருப்பதிகத்தினால் போற்றிப் பரவுகின்றார்.

கண்டவர் கைகள் கூப்பித் தொழுதுபின் தொடர்வார்க் காணார்
வண்டலர் கொன்றையாரை வடிவுடை மழுவென்றேத்தி
அண்டர்தம் பெருமான் போந்த அதிசயம் அறியேனென்று
கொண்டெழு விருப்பினோடும் கூடலையாற்றூர் புக்கார்
- (ஏயர்கோன் கலிக்காமர் புராணம்: திருப்பாடல் 103)

வடியுடை மழுவேந்தி மதகரிஉரி போர்த்துப்
பொடியணி திருமேனிப் புரிகுழல் உமையோடும்
கொடியணி நெடுமாடக் கூடலையாற்றூரில்
அடிகள் இவ்வழிபோந்த அதிசயம் அறியேனே
(சுந்தரர் தேவாரம் - கூடலையாற்றூர் - திருப்பாடல் 1)

திருச்சிற்றம்பலம்

**சிவத்திரு. தென்னாடு நிலவன்**
**படம்-தேவராஜன் நடராஜன்**

# தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல் – கேட்போம் தெளிவோம்



சிவஞானச் செல்வர். மருத்துவர் ஈசான பிரதாபன் தேசிகர்

**சைவாலயங்கள் எவை? உமாதேவியார், முருகன் பிள்ளை யார் கோயில்கள் சைவாலயங்களில் அடங்குமா? திருமால் கோயில்கள் சைவாலயங்களில் அடங்குமா?**

சிவபரத்துவம் பேணி வழிபாடு நடைபெறும் கோயில்கள் யாவும் சைவத்திருக்கோயில்களேயாகும். பண்டிதர் மு.கந்தையா பெருமானார் நாவலர்பெருமானின் மாணாக்கர் பரம்பரை வந்த சீலமுடையவர். பிள்ளையார், முருகன், உமாதேவியார் திருக்கோயில்கள் மட்டுமல்ல் இலங்கையில் விளங்கும் திருமால் கோயில்களும் சைவத்தலங்களே என்று விளக்கிச்செய்துள்ளார். அஃதே நம்மவர் ஒழுகுதற்கு உரியதாம்.

இந்தியாவில் விளங்கும் சமயங்களில் சுமார்த்தமதம் எந்தவொரு ஆகமங்களையும் ஏற்காமையினால், கோயில் வழிபாடென்பது அம்மதத்தாருக்கு உரியதன்று. சைவசமயம் வைணவமதம் முதலியனவே கோயில் வழிபாடுகளை வலியுறுத்தும் ஆகமங்களைக் கொண்டுள்ளன. கௌமாரமதம் முதலிய சொற்பதங்கள் கடந்த ஒருசில நூற்றாண்டுகளாக உருவாக்கப்பட்ட போலிப்பெயர்களேயாகும். கௌமாரன் என்றால் குமரன் என்னும் பொருளேயாகும். எனவே முருகனின் பெயராகக் கௌமாரன் என்னும் பெயர் வழக்கில் உண்டு. ஆனால் கௌமாரமதம் என்னும் பெயர் வழக்கில் ஒருகாலும் இருந்தில்லை. சைவம் வைணவம் கௌமாரம் காணபத்தியம் சௌரம் சாக்தம் என்னும் சண்மதக்கதை சுமார்த்தமதத்தையே இந்துமதமாகத் தாபிக்கச் செய்வதற்கு உள்நோக்கத்தோடு உருவாக்கப்பட்டப் போலிக்கதையாகும்.

சைவநூல்களில் வழங்கும் அறுசமயங்கள் என்பவை காபாலிகம், வயிரவம், பாசுபதம், மாவிரதம் முதலிய சிவபரத்துவ சமயங்களையேயாகும். இவை சைவத்துக்கு அகச்சமயங்களாகும். அஃதுபோல், வைசேடிகம், நையாயிகம், மீமாம்சை, சமணம் முதலிய ஆறுசமயங்கள் புறச்சமயங்களாக விளங்கின.இவையே பண்டைய அறுசமயங்களாகும். அறுசமயத்துக்கும் தலைவன் என்று திருமுறைகள் ஏற்றுவது அகச்சமய அறுசமயங்கள் என்பதும், அறுசமயங்களால் அறியப்படமுடியாதவன் என்னும்போது புறச்சமயங்கள் ஆறினாலும் அறியப்படமுடியாதவன் என்னும் வழியிலுமே கொள்ளப்படவேண்டும்.

இவற்றை அகம் அகப்புறம் புறம் புறப்புறம் என்னும் நால்வகையில் வகுக்கும் மரபு சிவஞானமுனிவரால் சிறப்புப் பெற்றது. எனவே, வெகுபிற்காலத்திலேயே கௌமாரமதம் முதலிய போலிப்பகுப்புக்கள் உலாவலாயின. இஃது, சைவப் பெருஞ்சமயத்தில் இருந்து முருகவழிபாட்டை பிள்ளையார் வழிபாட்டையெல்லாம் பிரித்து வேறுசெய்து, சைவசமயத்தை ஓரங்கட்டி, இந்துமதம் என்னும் பெயரில் சங்கராசாரிய சுமார்த்தமதத்தை நிலைநிறுத்த முயற்சித்தோர் மேற்கொண்ட போலிக்கதைகள் என்பதனைச் சைவசமயத்தார் நன்றே தெளிந்திருத்தல் அவசியம்.

முருகன் கோயில்களைக் கட்டும் விதிமுறைகள், முருகன் கோயில்களில் மேற்கொள்ளும் பூசை முறைகள் யாவும் குமாரதந்திரம் என்னும் ஆகமப்படியே முன்னெடுக்கப்படுகின்றது. இஃது, சிவாகமங்களில் ஒன்றாகிய இலலிதாகமத்தின் ஒருபிரிவாகும். அஃதாவது சைவ உபாகமமாகும்.இவ்வாகமத்தில் சிவபெருமானே முருகன் என்றும், சிவாசாரியரே முருகனுக்கு வழிபாடுகளைச் செய்யும் உரித்துடையார் என்றும், சிவபூசைச் சிறப்புக்களும் கூறப்பட்டுள்ளது சைவாகம உபாகமம் என்பதற்குத் தக்கசான்றாகும். மேலும், அருணகிரிநாதப்பெருமான் “சைவமுதல் குருவாயே” என்று முருகப்பெருமானை வழிபடுகின்றார். நக்கீரர், கச்சியப்ப சிவாசாரியார், அருணகிரிநாதப்பெருமான், குமரகுருபரப்பெருமான், பாம்பன்சுவாமிகள் முதலிய சிவஞானிகள் கைக்கொள்ளாத ஒரு பெயர் வழக்கே கௌமாரமதம் என்பதாகும்.எனவே, இஃது போலியென்பது முடிவாகும்.

காணபத்தியமும் இவ்வாறேயாகும். சாக்தம் சிவபரத்துவ வாம வழிபாட்டில் இருந்து பிறழ்ந்து உருவான புதிய வழிபாட்டு நெறியாகும். சௌரமதம் என்பதும் போலிக்கதையேயாகும். வைணவம் ஒன்றுக்கே தனியான ஆகமங்கள் உண்டு.எனினும் இலங்கையில் விளங்கும் திருமால் கோயில்கள் சைவாகம வழியில் ஈழத்திற்கே சிறப்பான திருமால் பத்ததிகளை அடிப்படையாகக் கொண்டே பண்டுதொட்டு அமைக்கப்பட்டு வந்துள்ளன. யாழ்ப்பாணம் வல்லிபுர ஆழ்வார் கோயிலில் சண்டேசுவரர் சன்னிதி அண்மைக் காலத்திலேயே அகற்றப்பட்டுள்ளது. இஃது திருமாலுக்கு சண்டேசுவரர் சைவநூல்களிலும் கூறப்படாமையினாலேயாகும்.

திருச்சிற்றம்பலம்



# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம், கொக்குவில், யாழ்ப்பாணம். www.thennadu.org

**சிவத்திரு. சிவ. செந்தமிழாதன், இளம்புலவர் - தென்னாடு,**
**செந்தமிழ் ஆகம சிவமடம் – கொக்குவில்.**
+94 (77) 575 2551 / aathan@thennadu.org



# நல்லூர் தரும் பாடம்!

நம் சமூகத்தின் ஆன்மீக இதயத் துடிப்பாகத் திகழ்கின்ற நல்லூர் கந்தசுவாமி கோயிலின் பெருந்திருவிழா, இம்முறை பெரும் மகத்துவத்துடன் நடைபெற்று நிறைவடைந்தது. பல்லாண்டு காலமாகப் பாரம்பரியத் தழுவலோடு, பத்தி செறிவோடும் தொடர்ந்து நடைபெறும் இத்திருவிழா, இன்று இந்த மண்ணில் மட்டும் அல்லாது உலகெங்கும் வாழும் தமிழரின் அடையாளமாகப் பார்க்கப்படுகின்றது. நல்லூரின் ஒவ்வொரு நாள் திருவிழாவும், ஒவ்வொரு சிறப்பியல்புகளோடு சீர்பெற்று நிறைவடைந்தது!

நல்லூர் திருவிழா என்பது வெறும் சமய வழிபாடு மட்டுமல்ல. அது நம் பண்பாட்டு வெளிப்படுத்துகை! சைவ சித்தாந்தநெறிகள், தமிழ் மரபுகள், கலைவாழ்வின் வளங்கள் ஆகியவற்றை ஒருங்கே வெளிப்படுத்தும் ஆன்மீக மேடையாக இவ்விழாக்காலம் திகழ்கிறது. கடவுள் மீது கொண்ட நம்பிக்கையும், சமூகம் மீது கொண்ட பற்றும், பண்பாடு மீது கொண்ட அக்கறையும் என இம்மூன்றையும் நல்லூர் ஒருங்கே நமக்கு அளிக்கிறது என்றால் அது மிகையல்ல!

இத்திருவிழாக்காலத்தில் கோயில் வீதிகளில் ஒருவரது நெஞ்சில் எழும் பத்திக் கண்ணீரும், இன்னொருவரது நெஞ்சில் எழும் ஆனந்தச் சிரிப்பும் இணைந்து பத்தி அலைபோல கலந்து பாய்ந்ததைக் கண்டோம்! இதுவே நல்லூர் திருவிழாவின் பெரும் சிறப்பாகும். இது வெறும் பத்தி அனுபவமாக மட்டுமே இல்லாமல், சமூக வாழ்வின் அடித்தளத்தையும் வலுப்படுத்துகிறது. குடும்பங்களும், நண்பர்களும், புலம்பெயர்ந்த தமிழர்களும் – அனைவரையும் ஒன்றாகக் கூட்டி நிறுத்தும் புனித மேடை நல்லூர் தான். இது எம் தலைமுறைகளை எம் மரபில் மாறாமல் தக்கவைக்கும் தனித்துவமுமாகும்!

நவீன உலகம் விரைவாக மாறிக் கொண்டிருக்கிறது. தொழில்நுட்பம், பொருளாதாரம், அரசியல், சமூக சவால்கள், இவை அனைத்தும் மனிதனை மன அழுத்தத்திற்குள் தள்ளுகின்றன. அத்தகைய சூழலில், நல்லூர் திருவிழா நம் மனங்களுக்கு ஒரு அமைதியையும் ஓய்வையும் அளித்தது.

நல்லூர் திருவிழா நமக்குக் கற்றுக் கொடுப்பது நம்பிக்கை இழந்துவிடாதீர் ஒற்றுமையைப் பேணுங்கள் பண்பாட்டை மதியுங்கள் என்பதையே ஆகும். ஒரு வரது வாழ்க்கையில் கடவுளின் மீது கொண்ட நம்பிக்கை எவ்வளவு வலிமை தருகிறது, அது சமூக ஒற்றுமைக்கு வழிவகுத்து ஆரோக்கியமான எதிர்காலத்தை தருகிறது என்பதை நல்லூர் மீண்டும் மீண்டும் நமக்கு உணர்த்துகிறது.

வருடத்தில் ஏறக்குறைய ஒருமாதம் நிகழும் இத்திருவிழா அனுபவம் வருடம் முழுவதும் நாம் பத்தியோடும் சமூக ஒற்றுமையோடும் வாழ வழிகாட்டுகிறது.

தென்னாடு இதழ் இந்த ஆழமான உண்மையை வாசகர்களுடன் பகிர விரும்புகிறது. நல்லூரின் திருவிழா நமக்கு அளிக்கும் அந்த உன்னதப் பாடத்தை உள்ளங்களில் நிறுத்திக் கொண்டு, நாள்தோறும் வாழ்வின் பாதையில் பயன்படுத்துவோமாக!

**அலங்கார வேலவனை,**
**அருள்பெருகு காவலனை,**
**நம்மோடிருக்கும் நாயகனை,**
**நாளும் ஏற்றிப் போற்றுவோம்!**

**திருச்சிற்றம்பலம்**

# நாள்தோறும் சிவபெருமானுக்குக் குங்கிலியத் தூபமிட்ட மறையவர் குங்கிலியக் கலயனார்





செல்வி.
நவிசா ஈஸ்வரானந்தம்
கலைமாணி

இவ்வுலகத்தை தொடர்ந்து இயக்கிக் கொண்டிருக்கும் இறைவன் எதை எமக்கு தர வேண்டும் என நினைக்கிறாரோ அதைத் தருவார். ஆனால் இறைவனுக்குச் செய்ய வேண்டிய கைங்கரியத்தை எந்தக் காலத்திலும் நாம் நிறுத்தது தொடர்ந்து செய்தால் கருணைக்கடவுளாகிய பரம்பொருள் உதவுவார் என்பதை தனது அனுபவத்தினூடாகவும், வாழ்வியலூடாகவும் இவ்வுலகத்திற்கு எடுத்துக்காட்டியவராக, காவிரி பாயும் சோழவள நாட்டில் திருக்கடவூரைச் சேர்ந்த கலயனார் விளங்கினார்.

இத்திருகடவூரில் மார்க்கண்டேயன் என்னும் சிறுவனைக் காக்க காலனைக் காலால் உதைத்து, காலனை வென்ற பெருமானாகிய அமிர்தக்கடேசுவரரின் மேல் பேரன்பு கொண்டு கலயனார் தினமும் விதிப்படி குங்கிலிய தூபம் இடும் திருப்பணியை நியதியாகச் செய்து வந்தார். ஆதலால் இவரை எல்லோரும் **“குங்கிலியக் கலயனார்”** என்று அழைத்தனர்.

சிவபெருமானிடம் இவர் கொண்டிருந்த மாறாத பேரன்பினை அறிந்து கொள்ள, இறைவன் குங்கிலியக்கலய நாயனாரை சோதிக்க எண்ணினார். தனது திருவருளாலே அவருக்கு வறுமை என்கின்ற பதத்தை வழங்கினார். வறுமை தோன்றிய பொழுதிலும் தமது அன்றாட ஆடம்பரங்களையும் செலவுகளையும் குறைத்தாலும் குங்கிலியம் இடுவதை தவறாமல் ஆற்றினார். வறுமை மிகவே தமது நல்லநிலம் முழுவதையும், அடிமைகளையும் விற்ற கலயனார் இறைவனை வழிபடும் குங்கிலிய தூப வழிபாட்டு முறையை மட்டும் நிறுத்தவில்லை. காலப்போக்கில் அவருடைய செல்வவளம் முழுவதும் கரைந்தது. வறுமை மேலும் முடுகியதனால் தாமும், மனைவி, மக்களும் சுற்றமும் உண்ண ஆகாரமின்றி பட்டினி கிடந்தனர்.

இதுகண்ட மனைவியார் மனம் நொந்து கணவனார் கையிற் தன்னுடைய பொன்னாலான திருமாங்கல்யத்தை எடுத்துக் கொடுத்து திருமாங்கல்யத்தை விற்று நெல் உள்ளிட்ட உணவுப் பொருட்களை குழந்தைகளுக்கு வாங்கி வருமாறு கூறினார். கலயனாரும் திருமாங்கல்யத்தைப் பெற்றுக் கொண்டு வீதியில் செல்கையில் ‘இன்றைய தூப வழிபாட்டிற்கு குங்கிலியம் இல்லையே என்ன செய்வது?’ என்று யோசித்துக் கொண்டே சென்றபோது மீண்டும் அவருடைய மனவலிமையை சோதிக்க இறைவன் புரிந்த திருவிளை

யாடலை சேக்கிழார்,

அப்பொழு ததனைக் கொண்டு
நெற்கொள்வான் அவரும் போக
ஒப்பில்குங் குலியங் கொண்டோர்
வணிகனும் எதிர்வந் துற்றான்
இப்பொதி யென்கொல் என்றார்
உள்ளவா றியம்பக் கேட்டு
முப்புரி வெண்ணூல் மார்பர்
முகமலர்ந் திதனைச் சொன்னார்
- ( திருத்தொண்டர்புராணம் 12:17:10 )

என அழகாக கூறியுள்ளார். எதிரில் ஒரு வணிகன் ஒப்பில்லாத குங்கிலியப் பொதிகொண்டு வந்தான். அதனை அறிந்த கலயனார் "இறைவனுக்கேற்ற மணமுடைய குங்கிலியம் இதுவாயின் இன்று நல்ல பேறுபெற்றேன். பெறுதற்கரிய இப்பேறு கிட்ட வேறுகொள்ளத்தக்கது என்ன உள்ளது?" என்று துணிந்து பொன் பெற்றுக்கொண்டு குங்கிலியப் பொதியினைத் தருமாறு வணிகனைக் கேட்டார். அவனும் மகிழ்ந்து அவர் தந்த தாலியைப் ஏற்றுக்கொண்டு குங்கிலியப் பொதியை கொடுத்துச் சென்றான். கலயனார் சிந்தை மகிழ்வுடன் விரைந்து சென்று கோயிற் களஞ்சியத்தில் அப்பொதியின் குங்கிலியத்தைச் சேமித்து வைத்தார். தூபத் திருப்பணி செய்துகொண்டு சிவசிந்தையுடன் அங்கேயே தங்கினார்.

அன்று இரவு மனைவியாரும், பிள்ளைகளும் பசியால் மிகவருந்தி அயர்ந்து தூங்கினர். அப்போது இறைவனுடைய திருவருளினாலே குபேரன் தனது செல்வத்தைப் பூமியில் கொண்டுவந்து நிறைத்து கலயனாரது மனை முழுவதும் பொற்குவியலும் நெற்குவியலும் அரிசி முதலிய பிற எல்லா வளங்களுமாக ஆக்கி வைத்தனன். இதனை இறைவன் அம்மையாருக்குக் கனவில் உணர்த்த, அவர் உணர்ந்து எழுந்து செல்வங்களைப் பார்த்தனர் அவற்றை இறைவரின் அருள் என்று கண்டு கைகூப்பித் தொழுதனர் தனது கணவனாரிற்குத் திருவமுது சமைக்கலாயினார். திருக்கோயிலில் இருந்த கலயனார்க்கு **"நீ பசித்தனை! உன் மனையிற் சென்று பாலின் இன் அடிசில் உண்டு துன்பம் நீங்குக"** என்று இறைவர் கட்டளை இட்டு அருளினார்.

அத்திருவருளை மறுப்பதற்கு அஞ்சிக் கலயனார் மனையில் வந்தனர். செல்வமெல்லாங் கண்டனர் திருமனையாரை நோக்கி **"இவ்விளைவெல்லாம் எப்படி விளைந்தன?"** என்று கேட்க, அவர் **"திருநீலகண்டராகிய எம்பெருமானது அருள்"** என்றார். மீண்டும் தன் செல்வமெல்லாம் கிடைத்தால் கலயனார் கைகூப்பி வணங்கி **"என்னையும் ஆட்கொள்ள எம்பெருமான் திருவருள் இருந்தபடி இதுவோ?"** என்று துதித்தனர். அப்போது எம்பெருமான் அசரீரியாக **"எம்பொருட்டு நீ இழந்த செல்வமெல்லாம் நாம் உமக்கு திருப்பித் தந்திருக்கின்றோம் இவை அனைத்தையும் வைத்துக் கொண்டு இக்கைங்கரியத்தை தொடர்ந்து செய்"** என்றார். இவ்வாறு இறைவனருளால் உலகில் நிறைந்த செல்வமுடையவராகி அடியவர்களுக்கெல்லாம் நல்ல இனிய அமுதூட்டியும் உதவியும் வாழ்ந்திருந்தனர்.

இவ்வாறு பணி செய்து வாழும் நாளில் திருப்பனந்தாளில் வீற்றிருக்கும் சிவலிங்கத் திருமேனி, தாடகை என்ற அரசமாதுக்கு அருளும் பொருட்டு சாய்ந்தது. சாய்ந்தவாறே இருந்தது. அதனைச் சாய்வுபோக்கி கண்டு கும்பிட வேண்டுமென்று ஆசை கொண்ட சோழமன்னன் யானைகளையும் சேனைகளையும் பூட்டித் திருமேனியினை நிமிர்த்த முயன்றனன். இறைவர் நேர் நிற்கவில்லை. யானைகளும் இளைத்து வீழ்ந்தன. அரசன் மிகவும் கவலையோடிருந்தான். இதனைக் கேள்வியுற்ற குங்கிலியக்கலய நாயனார், நாதனை நேர்காணும் பணியில் நின்ற அரசனை விரும்பித் திருக்கடவூரின்றும் சென்று திருப்பனந்தாளிற் சேர்ந்தனர். சேனைகள் இளைத்து வீழ்ந்து எழமாட்டா நிலைகண்டு மனம் வருந்தினார்.

இவ்விளைப்பிலே நானும் பங்குகொண்டு இளைபுறவேண்டும் என்று துணிந்தார். இறைவரது திருமேனிப் பூங்கச்சிற்கட்டிய பெரிய வலிய கயிற்றினை தம் கழுத்திற் பூட்டி இழுத்து வருந்தலுற்றார். கலயனார், ஒரு நெறிய மனம் கொண்டு அன்பு என்னும் திண்ணிய நாரால் கழுத்தில் பூட்டி இழுத்து வருத்தமுற்ற பின்னரும், பெருமான் தம் திருஉருவத்தைச் சாய்த்து நிற்க முடியுமோ? கலயனாரின் ஒருமை அன்பின் திறத்தைக் கண்ட அமையத்தேயே பெருமான் நேராக நின்றார் என்பதை சேக்கிழார்,

நண்ணிய ஒருமை யன்பின்
நாருறு பாசத் தாலே
திண்ணிய தொண்டர் பூட்டி
இளைத்தபின் திறம்பி நிற்க
ஒண்ணுமோ கலய னார்தம்
ஒருப்பாடு கண்ட போதே
அண்ணலார் நேரே நின்றார்
அமரரும் விசும்பில் ஆர்த்தார்
- ( திருத்தொண்டர்புராணம் 12:17:28)

என அழகாக கூறியுள்ளார். தேவர்கள் விண்ணில் ஆரவாரித்துப் பூமழை பெய்தனர். வாடியசோலை தலைமழை பெய்து தழைப்பது போல யானை சேனைகள் களித்தன. சோழ மன்னன் கலயனாரது பாதங்களில் வீழ்ந்து வணங்கி மேருவை வில்லாக வளைத்துப் புரமெரித்த கடவுளின் செந்நிலை காணச் செய்தீர்! திருமாலுங் காணாத மலரடியிணைகளை அன்புடைய அடியாரே அல்லலால் நேர்காண வல்லார் யார்? என்று துதித்தான். பின்னர் அரசன் இறைவர்க்குப் பிறபணிகள் பலவும் செய்து தனது நகரத்திற்குச் சென்றான். அரசன் சென்ற பின்னரும் கலயனார் சிலநாள் இறைவனை பிரிய ஆற்றாது அங்கு தங்கி வழிபட்டுப் பின் திருக்கடவூர் சேர்ந்தனர்.

திருக்கடவூரிலே தூபத்திருப்பணி செய்திருக்கும் நாளில் ஆளுடைய பிள்ளையாரும் ஆளுடைய அரசுகளும் அத்திருத் தலத்திற்கு எழுந்தருளினார்கள். மிக்கமகிழ்ச்சி பொங்கக் கலயனார் அவர்களை எதிர்கொண்டு அழைத்து வந்தார். தமது திருமனையில் அவர்களது பெருமைக்கேற்றவாறு இன்னமுது அளித்து வழிபட்டார். அதனால் அவர்களது அருளே அன்றி இறைவரது அருளும் பெற்றார். இவ்வாறு கலயனார் அரசனுக்கும், அடியவர்களுக்கும் ஏற்றனவாய்த் தமக்கு நேர்ந்த பணிகள் பலவும் செய்து வாழ்ந்திருந்து ஆவணித் திங்கள் மூலம் நட்சத்திரத்தில் சிவபெருமானது திருவடி நிழலிற் சேர்ந்தார்.

சிவனுக்கும் அவர்தம் அடியவர்களுக்கும் தொண்டுகள் பல புரிந்த தாமும் வாழ்ந்து எம்மையும் இவ்வையகத்தில் வாழ்வாங்கு வாழ வழிகாட்டிய குங்கிலியக்கலய நாயனாரை சுந்தரர் திருத்தொண்ட தொகையில்**"கடவூரிற் கலயன்றன் அடியார்க்கும் அடியேன்"** என்று போற்றுகிறார்.

திருச்சிற்றம்பலம்

# திருத்தொண்டர் புராணம் எனும் பெரிய புராணத்தின் பேருரை ஆசிரியர்
# சிவக்கவிமணி சி.கே. சுப்பிரமணிய முதலியார் ஐயாவின் உரை நயம்

**(சென்ற இதழ்த் தொடர்ச்சி)**

**நகரச்சிறப்பு பாடல் - 05**

**அங்கு உரைக்குஎன் அளவு? அப் பதிஇலார்**
**தங்கள் மாளிகை யின்ஒன்று சம்புவின்**
**பங்கினாள் திருச் சேடி பரவையாம்**
**மங்கை யார்அவ தாரம்செய் மாளிகை**

**பொருள் :-** அவ்விடத்தே உரைக்கும் உரைகளுக்கு என்ன அளவிருக்கின்றது? அங்குள்ள மாளிகைகளிலே பதியிலார் எனும் உருத்திரகணிகையர் மாளிகைகள் பலவற்றுள் ஒன்று, இறைவனது ஒரு பாகத்திலே உள்ள உமையம்மையாரின் சேடியாகிய (அனிந்திதை, கமலினி) என்னும் இரு சேடி மார்களில் ஒருவராகிய) கமலினியார் வந்து அவதரிக்க நின்றது என்று சொல்வோமானால்.



**சிவக்கவிமணி**
**சி.கே சுப்பிரமணிய முதலியார்**



**பவானி சிவ**
**அ.வேலுச்சாமி**

**வி-உரை :-** திருவாரூருக்கு எத்தனையோ பெருமைகள் இருந்தாலும் பரவையார் அவதாரம் செய்த சிறப்பையும், அடுத்த பாடலில்இறைவரேதூதுசென்றஅந்தத்திருவீதி யின் சிறப்பையும், தூது போய் நடந்த திருவடி நாடும் எனின் இதன் பெருமை உரையில் அளவுபடுமோ? என வரும்பாட்டையும் சேர்த்து முடித்தலுமாம்.

**பதியிலார் :** உருத்திரகணிகையர், இஃது ஒரு குலம். சிவபெருமானையும் அவனே போன்ற அவன் அடியார்களையும் அன்றி வேறு பதியில்லாதவர். **“உன்னடியார் தாள் பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம் அன்னவரே எம் கணவராவார்”**. எனவும், **“எம்கொங்கை நின் அன்பரல்லார் தோள் சேரற்க, எம்கை உனக்கல்லாது எப்பணியும் செய்யற்க”** எனவும் வரும் திருவாசகங்கள் காண்க.

சம்புவின் பங்கினாள் : சம்பு - சுகத்தை உண்டுபண்ணுபவன் என்பது பகுதிப்பொருள். **“இன்பம் செய்தலில் சங்கரன் எம்பிரான்”** சம்பு - சிவபெருமான்.

**சம்புவின் :** சிவபெருமானுடைய இனிய பங்குக்கு உடையவள் என்றலுமாம். சிவபெருமானது ஒரு பகுதி அம்மையாருடையது ஆயினமையின் பங்கினாள் என்றார். **“மாதிருக்கும் பாதியன்”** முதலிய ஆட்சிகள் காணலாம். **“பாதி உமையாள் திருவுருவில் பாக அறியாதே”** (ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம்)

**பங்கினாள் திருச்சேடி:** இச்சேடியார்கள் இருவர், இவருட் கமலினியாரே பரவையாராய் வந்து இங்கு அவதரித்தவர்.

**அவதாரம் செய்மாளிகை:** அவதரித்தற்கு இடமாகிய திருமாளிகை.

**நகரச்சிறப்பு பாடல் - 06**

**படர்ந்த பேரொளிப் பன்மணி வீதிதான்**
**இடந்த வேனமு மன்னமுந் தேடுவார்**

**தொடர்ந்து கொண்டவன் தொண்டர்க்குத் தூதுபோய்**

**நடந்த செந்தா மரையடி நாறுமால்**

**பொருள் :-** பேரொளி வீசும் பல மணிகள் தூக்கிக் கட்டிய அந்நகரின் அம்மாளிகை இருக்கும் வீதியானது, தோண்டிச் சென்ற பன்றியினாலும், பறந்து சென்ற அன்னத்தினாலும் தேடப் பெறுபவராகிய இறைவர், தாமே வலியத் தொடர்ந்து சென்று ஆளாகக் கொண்ட வன்தொண்டர்க்காகத் தூதாகப் போய் நடந்து வந்த செந்தாமரை போலும் திருவடி மணம் கமழ்ந்து கொண்டேயிருக்கும்.

**வி-உரை :-** இச்சிறப்பு இத்திருவீதி ஒன்றிற்கே உள்ளது என்பது தோன்ற வீதிதான் என்றார். பரவையார் மாளிகை வீற்றிருப்பது இந்த வீதியே.

**இடந்த ஏனம் :** பன்றியுருவுடன் பூமியைத் தோண்டிக் கொண்டு அடிதேடிச் சென்ற விட்டுணு மூர்த்தி.

**அன்னம்:** அன்னவுருவெடுத்து விண்பறந்து அடிதேடிச் சென்ற பிரமதேவர்.

**தேடுவார் :** ஏனத்தாலும் அன்னத்தாலும் தேடப்பெறுபவர். அழல்தூணாய் நின்ற சிவபெருமானின் அடிமுடிகளை இவ்வாறு இவர்கள் தேடிச் சென்றும் காண இயலாது நின்ற வரலாறு கந்தபுராணத்தில் விரித்துக் கூறப்பெறும். தமிழ் வேதமாகிய அப்பர் சாமிகளின் இலிங்க புராணக் குறுந் தொகை திருப்பதிகமும் விரித்துக் கூறியுள்ளது.

தொடர்ந்து கொண்ட : பெரும் தேவர்களால் தேடப் பெறும் அப்பெருமை வாய்ந்தவராய் இருந்தும் தாமே வலியத் தொடர்ந்து ஆளாகக்கெண்டவராயும் அப்போது மறுத்து வலிமைபேசி வன்தொண்டர் என்ற பேர் பெற்றவராயும் உள்ள பிறர் தம்மைத் தேடிச் செல்லத் தாம் இவரைத் தேடித் தொடர்ந்து ஆட்கொண்டார் என்றது குறிப்பு.

அவ்வீதி பரவையார் அவதரித்த மாளிகையுடையதே அன்றி, அந்த மாளிகைக்கு அவரிடம் தொண்டர்க்காகத் தூதுபோய் நடந்த மணங்கமழும் பெருமையுடையதென அதனை அடுத்துக்கூறி, அங்கு உரைக்கென என் முடித்தபடி.

போயின என்னாது போய் நடந்த என இருமுறை கூறியது ஓரிரவிலே இருமுறை நடந்து தூதுசென்ற சரிதத்தைக் குறித்ததாம்.

செந்தாமரையடி நாறும்: திருவடியைத் தாமரை என்பது வழக்கு. ஒருமுறைக்கு இருமுறை தூது நடந்ததனால் அடி சிவந்தது என்பதும் குறிப்பு. செந்தாமரை போன்ற திருவடியில் திருமணம் வீசும்.

**நாறுதல்:** அருள்விளங்குதல்

**நகரச்சிறப்பு பாடல் - 08**

**உள்ள மாருரு காதவ ரூர்விடை**

**வள்ள லார்திரு வாரூர் மருங்கெலாந்**

**தெள்ளு மோசைத் திருப்பதி கங்கள்பைங்**

**கிள்ளை பாடுவ, கேட்பன பூவைகள்**

**பொருள் :-** யாவர்தாம் மனம் உருகாதவர்கள்? இடபத்திலே எழுந்தருளி வரும் தியாகேசரது திருவாரூரின் தெருப் பக்கங்களில் எல்லாம் தெளியும் ஓசைத் திருப்பதிகங்களைப் பசிய கிளிகள் பாடுவன. அவற்றை நாகணவாய்ப் பறவைகள் கேட்பன.

**வி-உரை :-** ஊர்விடை வள்ளலார் - விடை ஊர்ந்து வரும் வீதிவிடங்கராகிய தியாகேசர்.

**வள்ளல் :** வரையாது கொடுப்போன். அருளாலும் பொருளாலும் வரையறையின்மையின் இவரே உண்மை வள்ளலாவார்.

**தெள்ளும் ஓசை :** நெறிந்த ஓசையுடைய, தெள்ளுதல் - தூக்கி எறிதல் என்று கொண்டு சொல்வோர் கேட்போர்களது வினைகளை ஓடத் துரக்கும் ஓசை என்றுமாம்.

**“பல்லுயிர் வாழும் தெண்ணீர்ப் பழமண்ணிப்படிக்கரையை, அல்லியம் தாமரைத்தார் ஆரூரன் உரைத்த தமிழ், சொல்லுதல் கேட்டல் வல்லார் அவர்க்கும் தமக்கும் கிளைக்கும் எல்லியும் நன்பகலும் இடர் கூறுதல் இல்லையன்றே”** (திருப்பழமண்ணிப் படிக்கரை 7ம் திருமுறை)

**“உள்ளத்து உறுதுயர் ஒன்றொழியா வண்ணமெல்லாந், தெள்ளும் கழலுக்கே சென்றூதாய் கோத்தும்பீ”** - திருவாசகம்

**தொடரும்**

**திருச்சிற்றம்பலம்**

**ஆக்கம் : பவானி சிவ அ. வேலுச்சாமி**
**நன்றிகள் - சமயத்தமிழ் திங்கள் இதழ்**

# ஈசனைத் தேடிய தென்னாட்டுப் பயணம்-

## அருள்மிகு மலர்க்குழல் நாயகி உடனுறை ஐராவதேசுவரர் - மேலைத் திருமணஞ்சேரி (எதிர்கொள்பாடி)

## தேவாரப் பாடல்பெற்ற 276 சிவபுரங்களில் 28ஆவது திருக்கோயில் மேலைத் திருமணஞ்சேரி (எதிர்கொள்பாடி)

**“வைத்த உள்ளம் மாற்ற வேண்டா வம்மின் மனத்தீரே**
**அத்தர் கோயில் எதிர்கொள்பாடி யென்ப தடைவோமே”**

மணக்கோலத்துடன் வந்த அன்பனான அரசகுமாரன் ஒருவனை இறைவர் மாமனாராக எதிர்கொண்டு அழைத்துச்சென்றதால் **‘எதிர்கொள்பாடி’** என்றழைக்கப்படுதுடன், ஐராவதம் பூசித்துப் பேறு அடைந்த அற்புதத் தலமே அருள்மிகு மலர்க்குழல் நாயகி உடனுறை ஐராவதேசுவரர் பெருமான் உறையும் மேலைத் திருமணஞ்சேரி (எதிர் கொள்பாடி) திருத்தலம்.

**அமைவிடம்:** மயிலாடுதுறை, தமிழ்நாடு.

மயிலாடுதுறையில் இருந்து கும்பகோணம் செல்லும் வழியில் 10.கி.மீ. தொலைவில் உள்ள குத்தாலத்திலிருந்து 5.கி.மீ. தொலைவில் இக்கோயில் உள்ளது. குத்தாலத்தி லிருந்து ஆட்டோவில் செல்லலாம்.

**இறைவர் திருப்பெயர்:** ஐராவதேசுவரர், மதயானேசுவரர்.
**இறைவியார் திருப்பெயர்:** சுகந்த குந்தளாம்பிகை, மலர் குழல்மாது.
**கோயில் மரம்:** வில்வம்
**தீர்த்தம்:** ஐராவத தீர்த்தம்
**வழிபட்டோர்:** ஐராவதம், சுந்தரர், பட்டினத்துப் பிள்ளையார், சேக்கிழார் முதலியோர்
**பாமாலை:** சுந்தரர், சேக்கிழார்.

### திருத்தலத்தின் மீது பாடப்பட்டத் திருப்பதிகங்கள்

### சுந்தரர் அருளிய திருப்பதிகம்

மத்த யானை யேறி மன்னர்
சூழ வருவீர்காள்
செத்த போதில் ஆரு மில்லை
சிந்தையுள் வைம்மின்கள்
வைத்த உள்ளம் மாற்ற வேண்டா
வம்மின் மனத்தீரே
அத்தர் கோயில் எதிர்கொள்பாடி
யென்ப தடைவோமே. (07-07)

### சேக்கிழார் பாடல் குறிப்பு

எத்திசையுந் தொழுதேத்த மத்த யானை
எடுத்தெதிர்கொள் பாடியினை அடைவோம் என்னும்
சித்தநிலைத் திருப்பதிகம் பாடிவந்து
செல்வமிகு செழுங்கோயி லிறைஞ்சி நண்ணி
அத்தர்தமை அடிவணங்கி அங்கு வைகி



அருள்பெற்றுத் திருவேள்விக் குடியி லெய்தி
முத்திதரும் பெருமானைத் துருத்தி கூட
மூப்பதிலை எனும்பதிகம் மொழிந்து வாழ்ந்தார்.
(12-29-121)

### திருத்தலச் சிறப்பு

தேவாரப் பாடல் பெற்ற காவிரி வடகரைத் திருத்தலங்களில் 24வது தலமாக விளங்கும் எதிர்கொள்பாடி ஐராவ தேசுவரர் கோயில், **“மேலக் கோயில்”** என மக்கள் வழக்கில் வழங்கப்படுகிறது. மணக்கோலத்தில் வந்த அரசகுமாரனை இறைவன் மாமனாராக எதிர்கொண்டு அழைத்துச் சென்ற தால், இத்தலம் **“எதிர்கொள்பாடி”** எனப் பெயர்பெற்றது. இங்கு இந்திரனின் யானையான ஐராவதமும் வழிபட்டு பேறு பெற்றது என்பது தொன்மை நம்பிக்கை.

இத்தலத்திலிருந்து 2 கி.மீ தூரத்தில் திருமண வரம் தரும் தலமான திருமணஞ்சேரி கோயில் உள்ளதால், இத்தலம் **‘மேலை திருமணஞ்சேரி’** என்றும் அழைக்கப்பட்டு வருகின்றது. சித்திரைத் திங்களில் நடைபெறும் திருக்கல்யாண உற்சவத்தின் போது, இறைவன் மாப்பிள்ளைக் கோலத்தில் எதிர்கொள்பாடி கோயிலில் எழுந்தருளி, அங்குள்ள சிவாச்சாரியாரால் மணமகளின் தந்தைபோல் நிறை கும்ப மரியாதையுடன் வரவேற்கப்படுகிறார். பின்னர், சீரும் கொடுத்து பெருமை செய்தபின், இறைவன் திருமணஞ் சேரிக்குச் சென்று திருக்கல்யாணம் நடைபெறுவது இத் தலத்தின் சிறப்பாகும்.

மேலும், பொருள் இழந்தவர்கள், பதவி பறிபோனவர்கள், திருமணத் தோசம் உள்ளவர்கள், வயிற்று வலி மற்றும் வியாபார இழப்பால் தவிப்பவர்கள் இங்கு வழிபட்டால், இந்திரன், ஐராவதத்தின் சாபம் நீக்கியது போல் அவர்களுக்கும் அருள் புரிகிறார் என்பது தொன்மையான நம்பிக்கை யாகும்.

## திருத்தல வரலாறு

பரத முனிவர் தனக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க வேண்டி வேள்வி நடத்தினார். அவருக்கு பார்வதியே குழந்தையாகப் பிறந்தாள். மணப்பருவம் வந்தபோது, சிவபெருமானிடம் அவளை மணந்து கொள்ளும்படி பரத முனிவர் வேண்டினார். சிவபெருமானும் அம்பிகையை மணக்க பூமிக்கு வந்தார். பரத முனிவரும் மாப்பிள்ளையாக வந்த சிவபெருமானை நிறைகும்ப மரியாதையுடன் வரவேற்றார். பரத முனிவரின் மரியாதையை ஏற்ற இறைவன், அவரது வேண்டுதலுக்காக இங்கே எழுந்தருளினார். பரத முனிவர் எதிர்கொண்டு அழைத்ததால் இத்தலத்திற்கு எதிர்கொள்பாடி என்றும், சுவாமிக்கு திருஎதிர்கொள்பாடி உடையார் என்றும் பெயர் உண்டானது. ஐராவதம் என்னும் இந்திரனின் யானை வழிபட்டதால் ஐராவதேசுவரர் என்ற பெயர் பிற்காலத்தில் உண்டானது.

காசியில் சிவ வழிபாட்டை முடித்து திரும்பிய துருவாச முனிவர், எதிரே இந்திரனும், ஐராவதமும் வருவதைக் கண்டார். அப்போது தன்னிடம் இருந்த இறைவனை பூசித்த மலர்



மாலையை, இந்திரனுக்கு பரிசளித்தார், துர்வாச முனிவர். அதனைப் பெற்றுக்கொண்ட இந்திரன், அதை அலட்சியமாக தான் பவனி வந்த ஐராவதம் யானையின் தலை மீது வைத்தான். மலரில் வண்டுகள் மொய்த்ததால், ஐராவதம் அம்மலரை வீசி கீழே தள்ளியது. இதனால் கோபம் கொண்ட முனிவர், இந்திரனுக்கு நோய் பீடிக்கவும், ஐராவதம் காட்டு யானையாகவும் மாற சாபமிட்டார்.

இதனால் மனம் வருந்திய இருவரும் பல்வேறு சிவத் தலங்களை வணங்கிவிட்டு இறுதியாக எதிர்கொள்பாடி திருத்தலத்திற்கு வந்தனர். இங்கே காட்டு யானை தீர்த்தம் உருவாக்கிட, இந்திரனும் யானையும் சேர்ந்து ஈசனை



வழிபட்டனர். இதையடுத்து இந்திரனின் சாபம் நீங்கியது. காட்டுயானை மீண்டும் ஐராவதமாக மாறியது. அதன் காரணமாக இத்தல இறைவன் ஐராவதத்தின் பெயரைத் தாங்கி ஐராவதீசுவரர் ஆனார்.

## திருக்கோயில் அமைப்பு

இக்கோயில் மூன்று நிலை இராசகோபுரத்துடன் மேற்கு நோக்கி அமைந்துள்ளது. கோபுர வாயிலைக் கடந்து உள்ளே சென்றால் வெளி வீதியில் கொடிமரத்து விநாயகரையும், பலிபீடம் மற்றும் அதிகார நந்தி மண்டபம் ஆகியவற்றைக் காணலாம். கருவறை முன் மண்டபம் வழியே உள்ளே நுழைந்தவுடன் மேற்கு நோக்கிய சந்நிதியில் சதுர ஆவுடையார் மீது இலிங்க உருவில் இறைவன் ஐராவதேசுவரர் காட்சி தருகிறார். அம்பாள் மலர்க்குழல் நாயகி தெற்கு நோக்கி காட்சி தருகிறாள். பரத முனிவர் இங்கு சிவனை வழிபட்டுள்ளார். இவர் வணங்கிய பரதலிங்கம் வீதியில் இருக்கிறது.

திருக்கோயில் சுற்றில் தாமரை பீடத்தின் மீது கொற்றவை (துர்க்கை) காட்சி தருகிறாள். கருவறை முன் மண்டபத்தில் விநாயகர், வள்ளி, தெய்வானையுடன் சுப்பிரமணியர், திருமகள் ஆகியோரின் சந்நிதிகள் உள்ளன. வெளி வீதியில் கலைமகள், வைரவர், சனீசுவரர், துணைவந்த விநாயகர், ஆகியோருக்கு சந்நிதிகள் உள்ளன. திருச்சுற்றில் நடராசர் சன்னதி உள்ளது. அருகே ஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர், சூரியன், சந்திரன் ஆகியோர் உள்ளனர்.

சித்திரையில் இந்திர விழா, கார்த்திகை சோமவாரங்கள், மார்கழி திருவாதிரை, மாசியில் பெருஞ்சிவனிரவு, திருக்-கல்யாணம் மற்றும் அனைத்து கழுவாய் வழிபாடுகளும் இந்த கோயிலில் வெகு சிறப்பாக நடத்தப்படுகின்றன.

இக்கோயில் மூன்றாம் குலோத்துங்க சோழன் காலத்தில் கருங்கல்லால் கட்டியவர், கீரனூர் கிழவன் அரசுக் குடியான் திருநீலகண்ட சேரமான் சோழன் ஆவார். மூன்று நிலை இராசகோபுரம் அமைத்தவர் தொண்டை மண்டலத்து குன்றத்தூர் நாராயண முதலியார் மகன் வயிர முதலியார் ஆவார்.

**திருச்சிற்றம்பலம்**

**சிவத்திரு. தென்னாடு நிலவன்**
**தகவல் - சைவசமயக் கலைக்களஞ்சியம் நூற்தொகுப்பு**




**Siva P.Ketharan**
English Editor – Thennadu
Thennadu Tamil Atheenam (Madam) – Australia
+61 49949 3300, ketharan@thennadu.org



# The Importance of Being a Saiva Leader

In every age, societies look to their spiritual leaders not only for ritual guidance but for moral direction. Within Saiva Siddhāntam, leadership is not a privilege but a profound duty. A Saiva leader, whether a community leader, teacher, or even a young person, carries the privilege of ensuring that the flame of Saivam does not merely survive but illuminates generations to come.

Throughout Saiva history, we have been lucky to be blessed with an abundance of great leaders who have grown and preserved Saivam. Notably, the 63 Nayanmars can be considered as some of Saivam's greatest leaders, with their preachings through the Thirumurai being echoed thousands of years after. Importantly, the 63 Nayanamars all come from an array of different backgrounds and ages, which is evidence that no matter who you are, if you show full dedication towards Saivam, you can be a leader.

In our present age, this lesson is more urgent than ever. As communities spread across the globe, the responsibilities of Saiva leaders extend beyond temple walls. They must safeguard the authenticity of rituals while also making Saiva Siddhāntam relevant to modern generations. This could even mean teaching in Tamil and English, guiding youth to see their faith not as an obligation but as a source of strength, and demonstrating through action that Saivam is a way of life, not merely a weekend ritual.

Equally, Saiva leaders must act as moral compasses. Just as Appar and Sundarar spoke out against injustice and falsehood, today's leaders must have the courage to confront discrimination, greed, and divisiveness within and beyond the community.

Leadership is not about pleasing everyone or avoiding conflict, it is about standing firmly by saiva values, even when that path is difficult. To back away from truth in the face of opposition is not humility but neglect of duty.

True Saiva leadership means refusing to remain silent when wrongs are committed, whether in society at large or within our own community. A leader who compromises on justice for the sake of convenience risks losing both spiritual integrity and the trust of their people. In a world where it is often easier to step aside than to speak out, Saiva leaders must be the voices that remind us of our higher values.

So remember anyone and everyone can make a difference when it comes preserving and sharing Saivam and importantly always stick up for Saiva values no matter what tries to stop you.

# Saiva Saint Kungiliya Kalaya Nayanar - The Constantia



Among the sixty-three Nayanmars, Kungiliya Kalayar, the 10th in order, remains memorable not for conquest or scholarship, but for a life where devotion persisted even when the scaffolding of livelihood collapsed. His story draws its force from two moments of extremity: the surrender of his household into destitution, and the physical risk he took to restore a deity's form. Both preach the Saivite conviction that devotion is measured not by abundance, but by constancy under trial, born and performed organically.




Srisankarshan Srisatkunarajah
English Editor
Thennadu


## Background

Kalaya belonged to the Brahmin community of Thirukadavur, a fertile settlement near the Cauvery, where temple life and agrarian rhythms wove together. He was known for his practice of daily offering incense, kungiliyam, before Sivaperuman. The act itself was not elaborate, yet its repetition gave it weight: a ritual that defined his very identity. As the Puranam recalls, the fragrance of his offering was so constant that it became indistinguishable from the air of the shrine, thus embedding his service into the very identity of the temple experience of the flocks of devotees.

## The Descent into Poverty

The saint's devotion was tested by the slow erosion of fortune, a much too common a trend that the peruman likes to inflict on his most devout. Step by step, his family slipped into poverty until even basic grain was absent from their household. Yet the daily incense was never abandoned. His wife, though sharing in the hunger, did not resist his persistence. In the Puranam, this shared resolve of the household becomes a quiet act of sanctity in itself, echoing and proving that such levels of sacrifice, holiness and sanctity can be maintained even in Illaram, something

that a lot of scholarly ritualists condemn.

The extremity arrived when nothing remained but his wife's thali, the auspicious marriage ornament. In Saiva culture, this symbol is guarded even in the face of famine or misfortune, yet she placed it in his hand with willingness. Kalaya, true to his instinct, did not convert this final treasure into sustenance, but into incense. The decision was stark: the home would go without food and the wife would go without her marital dignity, but the shrine would not go without fragrance. The nayanar sacrificed his foremost duty as a husband and brought great trial and social agony by carrying out this deed, one might think. Realising this misadventure, the lord of his daily worship intervenes indirectly to settle both the potential societal scandal, and the personal sentiments of the most understanding partner.

## Response that bestowed saintliness

The Periyapuranam speaks of the benevolent Peruman's response artfully. That very night, the goddess of the house dreamed of Sivaperuman's grace, and by dawn the home, once stripped bare, overflowed with wealth and grain. The message was not simply that God rewards sacrifice, but that devotion, which holds its form in the face of collapse, cannot remain unseen. The incident elevated Kalaya's household from poverty into abundance, but it is the unbroken ritual in the darkest moment that the text preserves as the true miracle, recognising Kalayanar within the saintly ranks.

## The Trial at Thiruppanandal

Years later, another incident expanded the meaning of Kalaya's devotion. At Thiruppanandal, the Lingam of Aruna Jadeswarar had tilted, disturbing the temple order. Neither wealth nor strength was at Kalayar's command to address it. Instead, he tied a rope around the Lingam, fastening the other end around his own neck, and began to pull. It was not mere mechanics, but the physical placing of his own life as counterweight for the divine image.

The act was extreme: if the Lingam tilted and fell in the wrong direction, it would be his neck that bore the jerk. Yet the Lingam rose upright, straightened by the significance of his devotion, they say. Witnesses, including the reigning Chola monarch, saw in this act a miracle not of strength but of fidelity, a saint's readiness to offer his life as collateral for the integrity of the shrine.

## Remembrance

Kungiliya Kalaya Nayanar is remembered as a devotee who transformed purifying incense smoke into a declaration of fidelity. His sainthood rests not in ascetic withdrawal or intellectual systematisation, but in acts where the household, the body, and even the marriage bond were offered up for devotion. In Thirukadavur and beyond, his figure is recalled not as a distant legend but as the fragrance that fills temples to this day. His Kuru poosai is observed with incense offerings, echoing the act that defined his life, on the auspicious Aavani Moola Nakshathram.

If Kannappar's instinctive worship taught that devotion could erupt outside ritual instruction, Kungiliya Kalaya's life demonstrates that devotion, once begun, can withstand the erosion of wealth and even life itself. His story lingers, reminding the Saivite tradition that fidelity, when held without interruption, becomes its own miracle.

# Astronomy and the Science Behind Tamil Tradition of Celebrating Birthday Based on Birth Star (Nakshatra/Udu/Naalmeen) – A Brief Explanation with Evidence

Thiruchitrambalam

**Beloved Ones,**

To understand the scientific background behind the Tamil tradition of celebrating birthdays based on Nakshatra (Naalmeen – sidereal star), it is essential to explore concepts from astronomy, the Ainthiram Pan changam (ancient Tamil almanac), astrology or Nimitham (omenology), and Tamil cultural practices and customs. The Nakshatra birthday is constructed based on the ancient Tamil astrological method called Saadhaka Kanitham (Sadhaka Calculus), which is rooted in the motion of the sidereal stars.




Anusham, Kethai, Moolam forming Viruchigam (Scorpio) Orai – (R. Sivakumar, 2023a)

The Tamil astronomical timekeeping system is a refined calendar model based on a Solar–Lunar–Sidereal system (Sooriya–Sandhira–Naalmeen Mandala Kanitham). It is a well-developed temporal calendar formulation in Tamil culture.

**1. What is the Ainthiram or Panchangam?**

The Ainthiram or Panchangam is an astronomical tool used to measure external (cosmic) time.

The Ainthiram or Panchangam is a sophisticated astronomical instrument used by ancient Tamils to measure and calculate time. It is comparable in accuracy to modern astronomical science. This Panchangam (almanac) is composed of five essential components:

1. **Vaaram** (Sooriya Kaala Mandalam – Solar Time System): Time measured based on the Sun's motion.
2. **Tithi** (Sandhira Kaala Mandalam – Lunar Time System): Time calculated from the Moon's phases and used in calendrical calculations.
3. **Nakshatra** (Naalmeen or Star Constellation and Raasi Mandalam – Sidereal System): The method of determining star positions and the oraigal (Raasi/zodiac sectors) they govern.
4. **Yogam** (Graha and Nakshatra Rotational System – Planetary - Cycle): Prediction method involving the Sun, Moon, five visible planets, shadow planets (Rahu and Ketu – eclipse heat energies), and their effects through 12 zodiacal sectors (Oraigal).
5. **Karanam** (Heat, Gravitational, Day-Night Cycle System): A system that estimates the impact of heat, Earth's gravitational forces, and the biological circadian rhythms influenced by light and darkness.



**Dr. R. Sivakumar,**
(University Sains Malaysia, Penang, Malaysia)

Sangam poet **Kumattur Kannanaar** (2nd century CE) makes a significant observation in Pathitrupathu about how Tamils not only calculated time based on celestial movements but also practised Jyotidam (astrology) or Nimitham (omen interpretation):

**"நாள் கோள் திங்கள் ஞாயிறு கனை அழல்**
**ஐந்து ஒருங்கு புணர்ந்த விளக்கத்து அனையை (பதி. 14 1 - 4)**

**"Naal, Kōl, Thingal, Nyāyiru, Kanai azhal**
**Aindhu orungu punarntha vilakkaththu anaiyai"**
**– (Pathi.14.1–4)**

This refers to the 27 Naalmeen (Nakshatra star constellations), ☿ Mercury (Arivan), ♀ Venus, ♂ Mars, ♃ Jupiter, ♄ Saturn (Kaari), the Moon, the Sun, hidden dwell planets (Karanthurai Kolgal), hidden elemental factors (Karanthurai Thanimanangal), and shadow planets such as Rahu (Karkkai-Karungol) and Ketu (Sengol). The combined cosmic system of light and heat is beautifully expressed here.




The Sun's apparent motion through Simma/Madangal (Leo) – from Star Constellations: The Zodiac (2017)

In this verse, Kumattur Kannanaar poetically describes the

**Panchangam's five limbs – Vaaram, Tithi, Nakshatra, Yogam, and Karanam** – as being integrated into a luminous system of cosmic knowledge and omenology (Nimitha Vilakkam).

Thus, the Ainthiram Panchangam is not just a temporal calendar system but a comprehensive cultural-astronomical model that includes predictive systems for Tamil life practices, cosmology (both micro and macrocosmic), and elemental sciences. Its depth and scientific precision are undeniable to any genuine researcher.

**2. What does Nakshatra mean?**

Nakshatra refers to a star or constellation in the sky. In Tamil, it is synonymous with Naalmeen.

Etymologically, Nakshatra (‹ Latin noctis → nocturnal) in Tamil may be derived from:

**நள் + அச்சு + திரம்** (Nal + Achchu + Thiram) – which can imply "a radiant axis with concentrated energy," or "clustered force in patterned cosmic forms."


Here, the root **நள்** (Nal) denotes "density" or "saturation" – for instance, as in "**நள் இருள்**" (Naḷ Irul – deep darkness). Example from Kurunthogai 107:3–4:

**செறிவு: "நள் இருள் யாமத்து இல் எலி பார்க்கும் பிள்ளை வெருகிற்கு" (குறு. 107:3-4).**


**"Nal irul yāmattu il eli pārkkum pillai verukirkku"**

Meaning: The child of a jungle cat, prowling to catch mice in the dense darkness of the midnight hours...

Thus, Nakshatram implies something densely aligned or shining through cosmic rotational axes. In Tamil cosmology, it is a structure of Chitra/Enthira achchugal (geometrical/




The 12 Zodiac Constellations – (R. Sivakumar, 2023a)



The 12 Zodiac Constellations – (R. Sivakumar, 2023a)

energetic axes), which manifest visibly as Naalmeen in the sky.

**3. What is the astronomical calculation behind Nakshatra?**

Our ancestors defined a Naal (day) as the time it takes for the Moon to transit across a single Naalmeen (sidereal star). The position where the Moon resides is identified as the Naalmeen of that day.

This idea is reinforced in classical Tamil literature, including Pattinappaalai and Purananooru:

நீல் நிற விசும்பின் வலன் ஏர்பு திரிதரும்
நாள்மீன் விராய கோள்மீன் போல ( பட் 68)
"Neel nira visumpin valan ērpu thiritharum
Naalmeen viraaya kōlmeen pōla" – (Patti. 68)

("Like the planetary fish that circles around the daily star, Moving with strength across the blue-hued sky.")

மதிசேர் நாண்மீன் போல நவின்ற
சிறுபொ னன்கலஞ் சுற்ற விரீஇக்... "- (புறம்.160. குமணன்)
"Madisēr Naalmeen pōla navindra
Sirupon angalam sutra veerik..." – (Puram 160 – Kumannan)

("Like the radiant planetary fish adorned with the moon, it glided gracefully, spreading its delicate golden vessel in circles...")

This shows that the Moon's position in a Nakshatra defines the day, referred to as Naal in Tamil.

Even Tolkappiyam, the oldest extant Tamil grammar, acknowledges this:

"திங்களும் நாளும் முந்துகிளந் தன்ன " தொல்காப்பியம் 287
"Thingalum Naalum mundu kelandthanna" – (Tolkappiyam 287)

("The day (nal) and the moon (thingal) arise first (in temporal order).")

Here, Thingal (Moon) and Naal (day) are explained through phonetic convergence, again hinting at lunar-based time reckoning using Naalmeen (Nakshatra).

**The 27 Nakshatras (Naalmeen)** are astronomical segments that divide the Moon's orbit into **27 equal divisions**. Each Nakshatra spans approximately **13° 20'** of the 360° celestial ecliptic (i.e., 13 degrees and 20 arcminutes).

These 27 Naalmeen, categorized and named by ancient Tamils, form the sidereal framework for timekeeping, astrology, and cultural celebration – including birthdays – in Tamil tradition.

| No. | Naalmeen (Nakshatra) with Scientific Name | Tamil Gloss / Associated Words | Astronomical / Symbolic Meaning |
|---|---|---|---|
| 1 | **Aswini** (β and γ Arietis) | iralai, puravi, kuthirai thalai, pari, ivuḷi, ēṟu, chenni, maa, thukaram, munnāl | Horse Head |
| 2 | **Parani** (35, 39, and 41 Arietis) | aduppu koṇḍai, thāzhi, bhootham, tharāsu, kankul, kizhavan, soṟu | Hearth / Stove |
| 3 | **Karthigai** (Pleiades – η, τ, 17–23 Tauri) | āral, azhal, azhagi, alagu, iṟāl, aṟu mīn, āvi | Flame / Fire Cluster |
| 4 | **Rogini** (Aldebaran – α Tauri) | sakadu, aya nāḷ, vaiyam, paṇḍi, thēr, uruḷai, pāru | Chariot / Red Disk |
| 5 | **Mirugaseeridam** (λ and φ Orionis) | manṟalai, ainthāṉam, mārgazhi, mathi, kerāḷan, narippuram, mummīn, thēngāy | Deer Head |
| 6 | **Thiruvaathirai** (Betelgeuse – α Orionis) | mūthirai, iṟai, chengai, yāzh, vil, mārgazhi | Fiery Spark / Sacred Center |
| 7 | **Punarpoosam** (Castor and Pollux – α and β Geminorum) | kazhai, puṉarpoosam, piṇḍi, kār, thiran, mūngil, mālai, karumbu, āvaṇam, viṇḍam, punartham, pālai | Boat / Bundle |
| 8 | **Poosam** (γ, δ, and θ Cancri) | kārkuḷam, kodiṟu, pooththadam, vāvi, kuḍam, tharā, thailam, guru nāḷ | Sacred Bath |
| 9 | **Ayilyam** (δ, ε, η, ρ, and σ Hydrae) | katchevi, aravam, kavvai, pāmbu, paṇi | Coiled Serpent / Chakram |
| 10 | **Magam** (Regulus – α Leonis) | koṭunugam, muyar kani, vāykkāl, vēṭṭuvan, ēzhili, ēmali, māsi | Offering Stick / Pivot |
| 11 | **Pooram** (δ and θ Leonis) | kaṇai, nāvithan, eli, idaisani, thurkkai | Bed Leg |
| 12 | **Uthiram** (Denebola – β Leonis) | uththaram, pāṟkuṇi, paṅkuṇi, kadaichchani, pāṟkuḷam | Elevated Pillar |
| 13 | **Astha** (α, β, γ, δ, and ε Corvi) | aiviral, kai, angai, aimmīn, uththaman, kaḷiṟu, navvī, kouththuvam | Palm Platform |
| 14 | **Sithirai** (Spica – α Virginis) | aṟuvai, āḍai, āmpal, payaṟu, nei, mīn, selvī | Pearl |
| 15 | **Suvathi** (Arcturus – α Boötis) | viḷakku, sōthi, theepam, marakkāl, pathumam | Coral / Radiant Light |
| 16 | **Vishagam** (α, β, γ, and ι Librae) | muṟam, suḷavu, vaigāsi, muṟṟil | Archway / Entrance |
| 17 | **Anusham** (β, δ, and π Scorpionis) | muṭappaṉai, pul, thaaḷ, thēṉ, peṇṇai, paṉai | Umbrella / Palm Leaf |
| 18 | **Kethai** (α, σ, and τ Scorpionis) | thuḷangkoḷi vāḷi, vallārai, oḷi, nāḻi | Spear / Radiance |
| 19 | **Moolam** (ε to ν Scorpionis) | kurugu, kokku, thēṭkaḍai, āni | Leaping Lion |
| 20 | **Pooradam** (δ and ε Sagittarii) | udaikuḷam, muṟkuḷam, poygai, vāvi, uḍai | Twin Wheels |
| 21 | **Uthiraadam** (ζ and σ Sagittarii) | kadaikkuḷam, ūrdhi, maṇi, thāṉam, muḍi | Bed Leg |
| 22 | **Thiruvoonam** (α, β, and γ Aquilae) | mukkōl, ōṇam, kōṇai, chiravaṇam, ulakkai | Tri-footed Base |
| 23 | **Avittam** (α to δ Delphinus) | kākkai, puḷ, paṟavai, āvaṇi | Drum |
| 24 | **Sathayam** (γ Aquarii) | chekku, chuṇṭan, kuṉṟu, chekki | Circle |
| 25 | **Pooratthaadhi** (α and β Pegasi) | nāḻi, kozuṅkōl, purattai, ñāḻi | Bed Leg |
| 26 | **Uthiratthaadhi** (γ Pegasi and α Andromedae) | murasu, vēnthan, aṟivan | Bed Leg |
| 27 | **Revathi** (ζ Piscium) | thōṇī, nāvāy, nāvithan, kadaimīn, marakkalam, soolam | Twin Fish / Boat |

(R. Sivakumar, 2023a)

**The Moon takes approximately one day (24 hours)** to traverse a single Naalmeen (Nakshatra or star sector). Therefore, to pass through all **27 Naalmeen**, it takes about **29.5 days**, which the **Tamils defined as a month**, known in Tamil as **"Thingal"** (meaning lunar month or moon). This concept is beautifully reflected in the Tamil classical poem Pattirruppattu by **Perunkunrur Kizhar:**

'நின் நாள் திங்கள் அனைய ஆக திங்கள்' (பதி. 90: 51 - 54)
"Nin naal thingal anaiya aaka thingal" (Pati. 90: 51–54)

("Like your days and moons aligned, thus came the Thingal")

He poetically describes how the moon's movement across the **Naalmeen** created the days and shaped the month **(Thingal).**

**continued...**

# Fifth Doubt (Refuting the subtle deha - aanmavaada)

**Last month Summary:**

Sivakan, an 8-year-old, and his friends explored whether the subtle body experienced in dreams could be the soul. One friend suggested this because in dreams they still see and hear despite the physical senses resting. Sivakan explained that if the subtle body were truly the soul, then dreams would be remembered clearly and fully, just like waking experiences. Instead, dreams are often fragmented or forgotten, showing that the subtle body only works when driven by a deeper intelligence. He clarified that this conscious awareness of the soul is distinct from both the physical and subtle bodies, as it observes experiences in both waking and dreaming states. This helped his friends understand that the soul is beyond the subtle body.

One of our friends asked, "When we're in deep sleep, we don't dream at all. This state is called suzhuththi. At that time, the physical body, the senses, and even the subtle body all withdraw. But the breathing continues – the vital air, or prāṇa, still functions. So doesn't that mean the vital air must be the soul?"

I replied, "It's true that the vital air continues to function even when the body and senses are inactive. But prāṇa itself doesn't experience joy or sorrow. Only the conscious, intelligent soul is capable of awareness and experience. That's why the soul must be understood as something different from the vital air."

***Saiva Philosophy Reference:***

The takeaway of this discussion is that the soul cannot be identified through normal means. Though breathing continues during deep sleep, it is not the breath that experiences joy or sorrow. Only the conscious, intelligent soul is aware of such experiences. Therefore, the soul is distinct and remains the true knower behind all states of existence.

# Sixth Doubt (Refuting vijnana- aanmavaada)

**Last Month Summary:**

Sivakan, an 8-year-old, and his friends discussed whether the soul might actually be the Lord Almighty Himself, since both are intelligent entities. Sivakan explained that while the Lord's intelligence is absolute and ever-present, the soul's intelligence only manifests through the body and remains deluded without the Lord's grace. The soul depends entirely on the Lord to gain knowledge, whereas the Lord is all knowing and independent. Because of this fundamental difference, Sivakan clarified that the soul is not the Lord but a distinct entity reliant on Him. This helped his friends understand why the soul and the Lord cannot be the same.

Another friend suggested, "If the soul is not the gross body, the subtle body, the senses, or even the vital air, then could it not be the Lord Almighty Himself? After all, He is all pervasive, and so must also pervade this body. Why can't we say that the Lord Himself is the soul?"

I explained why this is not the case. The Lord Almighty and the soul are indeed both conscious, intelligent beings, but there is a key difference in the nature of their intelligence. The soul's awareness only becomes active when it is connected to and expressed through the body. Without that identification, the soul remains in a state of ignorance. In contrast, the Lord's Absolute intelligence is eternally complete, never dependent on a body for its manifestation.

The soul's knowledge is entirely dependent on the Lord. It cannot perceive or know anything unless the all-knowing Lord makes it known to the soul. Because of this essential difference, the soul's dependent and limited awareness versus the Lord's independent and infinite awareness the soul cannot be the same as the Lord.

***Saiva Philosophy Reference:***

The takeaway of this discussion is that the soul is not the Lord Himself. While both are intelligent entities, the soul's intelligence is limited and depends on the Lord, manifesting only through the body and often clouded by ignorance. The Lord's intelligence, by contrast, is absolute, independent, and ever-perfect. This difference shows that the soul, though sustained by the Lord, remains distinct from Him.

# தென்னாட்டு நிகழ்வுகள்



கொக்குவிலில் செந்தமிழில் புதுமனைப் புகுவிழா சாந்தி வழிபாடுகள் (23-08-2025)



ஆவணி சதுர்த்தி (27-08-2025)



தவத்திரு. வாதவூரடிகள் சுவாமிகள்
தென்னாட்டில் வழிபாடு (24-08-2025)










தென்னாட்டில் திருமுறை விண்ணப்பமும் திருமஞ்சன வழிபாடும் (26-08-2025)



# தென்னாட்டு நிகழ்வுகள்



ஆடித் திங்கள் நிறைமதி வழிபாடும் இதழ் வெளியீடும் (08-08 -2025)

தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம் மற்றும் சைவ மாணவர் சபையின் அறுபத்து ஒன்றாவது திங்கள் செய்தியிதழ் “தென்னாடு”, சிவத்திரு. சிவஞானம் ஜெயானந்தன் அவர்களால் வடிவமைக்கப்பட்டு நல்லூர் “மதி நிறங்கள்” ( மதி கலர்ஸ் ) பதிப்பகத்தில் அச்சிடப்பட்டு, மேழ விழுகம்ப ஊழி ஆண்டு 2299 மடங்கல் நல்லோரை ஆவணித் திங்கள் 22ம் நாள் நிறைமதி அன்று (07-09-2025 ஞாயிற்றுக்கிழமை) தென்னாட்டில் வெளியிடப்பட்டது. முதலாம் தமிழ்ச் சங்கம் கண்ட தென்னாடு என்பதை மனதில் நிறுத்தி, தென்னாடு செய்தியிதழையும் இயன்றளவு பிறமொழிக் கலப்பின்றி தெய்வத்தமிழில் தர முயற்சிக்கிறோம். சைவ மாணவர் சபை பதிவு இலக்கம் - HA/4/JA/343.

தொலைபேசி +94 21 222 9722 | புலனம் +94 (70) 770 1111 | மின்னஞ்சல் thennavan@thennadu.org

fb.com/thennadu | youtube.com/thennadu | www.thennadu.org